# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 05 அதிர்வு 54 டிசம்பர் 2021 editor@ethiroli.com தொ.பே:1800 960 162




| Month | Final Cut Off date | Estimated Arrival Date |
|---|---|---|
| November | 2021-11-06 | 2021-12-14 |
| November | 2021-11-13 | 2021-12-21 |
| November | 2021-11-20 | 2021-12-28 |
| November | 2021-11-27 | 2022-01-04 |
| December | 2021-12-04 | 2022-01-11 |
| December | 2021-12-11 | 2022-01-18 |
| December | 2021-12-18 | 2022-01-25 |





Photo credit: www.7news.com.au




ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

## நாணயமிக்க பணப்பரிமாற்றம்
## 'டன்டிநொங்' இல்
## புதியதோர் சேவை

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
ඔබේ විශ්වසනීය බැංකුව

PEOPLE'S BANK

COMMERCIAL BANK

HNB

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank

UNION BANK
ඔබේ දියුණුවේ බැංකුව

Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


NEW HOMES
MULTI UNIT DEVELOPMENTS
KNOCK DOWN AND REBUILD
EXTENSIONS
FOR MORE DETAILS:
1300 01 72 72 OR 0405 079 438
INFO@PARACONSTRUCTIONS.COM.AU
WWW.PARACONSTRUCTIONS.COM.AU
PARA Constructions
VBA VICTORIAN BUILDING AUTHORITY
REGISTERED Building Practitioner
MASTER BUILDERS VICTORIA

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
டிசம்பர் 2021



# மதத்தின் பேரிலான படுகொலை நிலைமாறு நீதி கிடைக்குமா?

● பிரதா

பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர், மிகவும் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு - சித்திரவதை செய்யப்பட்டு - எரித்து படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவமானது மனித நேயத்தை நேசிப்பவர்களை நிலைகுலைய வைத்துள்ளது.

'மதம்' பிடித்த வெறியர்களால் அரங்கேற்றப்பட்டுள்ள இந்த காட்டுமிராண்டித்தனமான சம்பவத்துக்கு கண்டனங்கள் குவிந்துவருகின்றன. இக்கொடூர சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனையோரை கைது செய்வதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இச்சம்பவத்துக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், குற்றவாளிகளுக்கு உச்சபட்ட தண்டனை வழங்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்படும் என்ற அறிவிப்பை உடன் விடுத்தார். அதுமட்டுமல்ல இலங்கை ஜனாதிபதியை தொடர்பு கொண்ட அவர், பாகிஸ்தான் மக்களின் சார்பில் மன்னிப்பு கோரியுள்ளார்.

மறுபுறத்தில் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சரும் இது சம்பந்தமாக இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் பேச்சு நடத்தி, நீதி நிலைநாட்டப்படும் என்ற உத்தரவாதத்தை வழங்கியுள்ளார். இதனால் இரு நாடுகளுக்குமிடையில் இராஜதந்திர மட்டத்தில் ஏற்படவிருந்த நெருக்கடி நிலையும் தவிர்க்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னர் பாகிஸ்தான் எடுத்த நடவடிக்கைகள் ஏற்புடையவையாக இருந்தாலும் அவற்றின் தொடர்ச்சியும் அதே வேகத்தில் அமையுமா என்பது தொடர்பில் இலங்கை கழுகுப்பார்வையை செலுத்தியுள்ளது.

பாகிஸ்தான், சியல்கொட் தொழிற்சாலையில் சுமார் 11 வருடங்களுக்கு மேலாக பிரியந்த குமார என்ற இலங்கையர் தொழில் புரிந்து வருகின்றார். பொறியல் துறை பட்டதாரியான அவர், குறித்த தொழிற்சாலையில் முகாமையாளர் பதவியை வகித்துள்ளார். நிறுவனத்தின் உரிமையாளருக்கு அடுத்தப்படியாக இவரே கூடுதல் அதிகாரம் படைத்தவராக இருந்துள்ளார்.

இந்நிலையில் தொழிற்சாலையை சுத்தப்படும் நோக்கில் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாதைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுகையில், மதம் சார்ந்த பதாதையொன்றையும் அகற்றிவிட்டார் என்பதாலேயே அடிப்படைவாதிகளால் பிரியந்த குமார இவ்வாறு கொடூரமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என தகவல் வெளியானாலும், அதனை இலங்கை நிராகரித்துள்ளது. முழுமையான விசாரணை வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. சரி, அவர் அகற்றிய பதாதை உணர்வுப்பூர்வமான விடயமாக இருந்தால்கூட அதற்கு எதிராக இப்படியான நடவடிக்கையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இலங்கையிலுள்ள தேசிய வாத அமைப்புகள் மற்றும் இதர தரப்பினரும் இந்த படுகொலை சம்பவத்தை வன்மையாக்க கண்டித்து, விசாரணை கோரி இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்திடம் மனுக்களை கையளித்துவருகின்றனர். அவர்களின் கோரிக்கை நியாயமானதே, அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. யார் செய்தாலும் குற்றம், குற்றம்தான். நிச்சயம் தண்டனை வழங்கப்பட வேண்டும், நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் நாமும் உறுதியாகவே இருக்கின்றோம்.

இலங்கையில் ஆடிக்கலவரத்தின்போது அப்பாவி தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாக கொல்லப்பட்டனர். ரயர்கள் எரிக்கப்பட்டு, மக்கள் பலர் வீசப்படும் கொடூரமான முறையில் கொலைகள் அரங்கேறின. தமிழர்களின் சொத்துகள் அடித்து நொறுக்கப்பட்டன.




சூறையாடப்பட்டன. ஆடிக்கலவரம் இவ்வாறு தந்த வடுக்கள் இன்றும் ஆறவில்லை. வலிசுமந்த அந்த காலகட்டத்தை வெறும் வார்த்தைகளால் விவரித்து விடவும் முடியாது.

அதேபோல புலிகளுக்கு எதிரான போர் என்ற போர்வையில் பச்சிளம் குழந்தைகள் முதல் கர்ப்பிணித் தாய்மார்வரை பலர் கொல்லப்பட்டனர். அதற்கான சாட்சிகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. சரணடையவந்த போராளிகள்கூட கொடூரமாகக் கொல்லப்படும் காட்சிகள் அடங்கிய காணொளிகள் வெளியாகி பெரும் பரபரப்பைக்கூட ஏற்படுத்தியது. இசைப்பிரியா உட்பட பெண்போராளிகளுக்கு நடந்த பேரவலங்களும் வெளிப்படையாக சொல்லமுடியாதவை.

குறிப்பாக பாகிஸ்தானில் நடைபெற்ற கொடூரத்தை விடவும் ஈழத்தில் நடந்த சம்பவங்கள் மிகக்கொடூரமானவை. எனவே, இவை தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும், நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு இலங்கையில் வாழும் தேசிய வாத அமைப்பினரும், பௌத்த தரப்பினரும் போர்க்கொடி தூக்குவது ஏன்? பாகிஸ்தானில் வந்ததால் தான் இரத்தம், இங்கு வந்தால் தக்காளி சட்னியா?

இலங்கையில் தேரவாத பௌத்த மக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். பௌத்த தர்மமானது, ஒரு ஈ, எறும்புக்குகூட தீங்கு விளைவிகக்கூடாது என்பதுடன், அன்பு, கருணை, அகிம்சையையே போதித்துள்ளது. எனவே, பௌத்தத்தின் வழியில் நடப்பவர்களாயின், தமிழர்களுக்கு எதிராக அரங்கேறிய வன்முறைகளுக்கு எதிராக நீதிகோரும்போது, அதற்கு வழிவிட்டு - விசாரணைக்கு துணை நிற்பதே சிறந்தது. மாறாக அதனை எதிர்த்து நிற்பது அதர்மாகவே கருதப்படும். அதுவே தற்போது இலங்கையில் நடந்து கொண்டிருக்கின்றது.

பாகிஸ்தானில் நடந்தாலும் இலங்கையில் நடந்தாலும் குற்றம் குற்றம்தான். ஒருவர் கொல்லப்பட்டாலும், ஓராயிரம்பேர் கொல்லப்பட்டாலும் கொடூரம், கொடூரம்தான். எனவே, நீதிக்கான பார்வையும் நியாயமானதாக இருக்க வேண்டும். அதைவிடுத்து இங்கு நடந்த சம்பவங்களுக்கு வெள்ளையடிப்பு செய்வதும், குற்றங்களை மறைத்து நீதியை வழங்காமல் இருப்பதும் பாகிஸ்தானில் அடிப்படைவாதிகள் செய்த செயலை விடவும் மோசமானது என கூறினாலும் அது தவறாக அமையாது.

பிரியந்த குமாரின் உடல் எரியூட்டப்பட்டிருந்தாலும் அவரின் உடற்பாகங்கள் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டன. அதன்மூலம் அவரின் உறவுகளுக்கு ஓரளவு ஆத்ம திருப்தி. சிலவேளை சமூகவலைத்தளங்களில் காணொளிகள் வராமல், சம்பவம் மறைக்கப்பட்டு, காணாமல்போனோர் பட்டியலில் பிரியந்த குமார சேர்க்கப்பட்டிருந்தால் நிலைமை என்னவாகும்? தேடி அலையவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். தமது உறவுக்கு என்ன நடந்தது என்பதை அறிய அவர்களின் உறவுகள் போராடுவார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் தமது உறவுகளுக்கு என்ன நடந்துள்ளது என்பதை அறியவே போராடுகின்றனர். நீதியை எதிர்ப்பார்த்து காத்திருக்கின்றனர். பிரியந்த குமாரவுக்காக துரிதமாக செயற்பட்டவர்கள் இவ்வாறான விடயங்களிலும் துரிதமாகவே செயற்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. 'வலி'யென்பது பொதுவானது. அதற்கு இனம் கிடையாது, மதம் கிடையாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:05 அதிர்வு: 54 டிசம்பர் 2021 தொ.பே:1800 960 162

## அதிகாரத்தின் பேரால் பெண்ணுடலை விழுங்குதல் முடிவிலியா?

பெண்ணுடல் மீதான அதிகாரமென்பது காலாதி காலமாகத் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. ஆனால் அந்த அத்துமீறல்களில் பெரும்பாலானவை வெளித்தெரியாமல் அமுங்கிப் போய்விடுவது அதை விட மோசமானதே. அண்மையில் ஆஸ்திரேயாவில் தமக்கு கீழ் பணிபுரியும் பெண் அதிகாரிகளை துஷ்பிரயோகிக்க முயன்ற அரசியல்வாதிகள் மற்றும் உயரதிகாரிகள் சிலரின் லீலைகள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

அவர்களில் ஒருவர் ஆஸ்திரேலியாவின் கல்வி மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக இருந்த அலன் டட்ஜ். அவர் தனது ஊடக ஆலோசகராக இருந்த ரச்சேல் மில்லர் என்ற பெண் அதிகாரியை 2017 ஆம் ஆண்டு பாலியல் ரீதியாகத் துன்புறுத்தலுக்குள்ளாக்கியுள்ளார். தனக்கு நேர்ந்த அநீதியை முதலில் வெளிப்படுத்த தயங்கிய ரச்சேல், பின்னர் அந்தச் சம்பவத்தால் உண்டான மனவுளைச்சலைத் தாங்கிக் கொள்ளமுடியாமல், கடைசியில் எல்லாவற்றையும் ஊடகங்களிடம் கொட்டித்தீர்த்துவிட்டார்.

ஆரம்பத்தில் ரச்சேலின் குற்றச்சாட்டுக்களை அமைச்சர் அலன் அலன் டட்ஜ் அடியோடு மறுத்தார். ஊடக வெளிச்சம் தன் மீது பாயவேண்டும் என்ற பேராசையால் ரச்சேல் இப்படியான அபாண்டத்தை தன் மீது சுமத்துவதாகத் தெரிவித்தார். எந்தவொரு விசாரணைக்கும் தயார் என்று அறிவித்தார். ரச்சேலும் துவண்டுவிடவில்லை. ‘நானும் ஆதாரங்களோடு உண்மையை நிரூபிப்பேன்’ என்று பதிலடி கொடுத்துள்ளார். எனவே இந்த விவகாரத்தால் அரசாங்கத்தின் பெயர் கெட்டுவிடாமல் இருக்கவேண்டும் என்பதற்காக , அமைச்சர் அலன் டட்ஜ் வகித்த அமைச்சுப் பதவியை ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மொறிசன் பறித்துள்ளார்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றப் பெண் பணியாளராகக் கடமையாற்றிய பிரிட்டானி ஹிகின்ஸ் என்பவர் “ஆஸ்திரேலிய நாடாளுமன்றில் பணிபுரியும் பெண் உத்தியோகத்தர்களில் மூன்றில் ஒருவர் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றார்கள், என்னையும் என் மேலதிகாரி ஒருவர் தன் அறையில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்தார்” என்று இன்னொரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். தொடர்ச்சியாக வெளிவரத்தொடங்கியுள்ள இப்படியான பாலியல் குற்றச்சாட்டுக்களால் ஆஸ்திரேலியா முழுதும் அதிர்ந்து கொண்டிருக்கிறது.

வெள்ளைக்காரப் பெண்கள் துணிச்சலானவர்கள்’ என்றொரு கருத்துநிலை கீழைத்தேய நாடுகளில் உண்டு. பாலியல்ரீயான அக்கிரமங்கள் இலங்கை, இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகளில் மட்டுமே அதிகம் நடப்பதாகவும், ஆனால் வெளிநாடுகளில் அப்படியான பாரதூரமான விடயங்கள் நடப்பது குறைவு என்றொரு நம்பிக்கையும் நம்மிடையே உலவவே செய்கின்றது. ஆனால் இலங்கையின் அக்கராயன் குளம் தொடக்கம் ஆஸ்திரேலியா வரை பெண்ணுடல் மீதான ஆக்கிரமிப்புகள் ஒரேதன்மையோடே வியாபித்துள்ளன. சகல இடங்களிலும் பாதிக்கப்படும் பெண்களில் பெரும்பாலானோர் தமதும், தமது குடும்பத்தினதும் எதிர்காலம் கருதி, தமக்கு நிகழ்ந்த அநீதியை வெளிப்படுத்த தயங்குகின்றனர். தமிழ்ப் பெண்களாக இருந்தாலும் சரி, வெள்ளையினப் பெண்களாக இருந்தாலும் சரி இதே நிலைதான்.

ஆனால் தங்களிடம் இருக்கும் அதிகாரத்தை தூண்டிலாகப் போட்டு, தம் சக பணியாளர்களையோ, கடைநிலை ஊழியர்களையோ பாலியல் இம்சைக்கு உள்ளாக்குவதைவிட அயோக்கியத்தனம் உலகில் வேறேதும் இருக்கமுடியாது. தனது மனைவியைக் கூட,அவளது சம்மதமின்றி தொடுவதும் குற்றமே என சட்டங்கள் உலகம் முழுதும் சொல்கின்றன. இருப்பினும் அதை எவரும் கணக்கிலெடுப்பதில்லை. தங்களின் கீழ்நிலைப் பணியாளர்களாக இருக்கும் பெண்களுக்கும் விருப்பு வெறுப்புகள், தனிப்பட்ட விருப்பத் தேர்வுகள், அன்பு, காதல், பாசம் என அத்தனை உணர்வுகளும் கொண்ட உயிரிகள் என்பதை அதிகாரத்தைக் கொண்டுள்ள எவரும் உணர்வதில்லை. அவர்கள் தம்மிடம் பணிபுரியும் அல்லது தம்மிடம் உதவிகோரும் பெண்களை பாலியல் பண்டங்களாகவே நோக்குகின்றனர். பல இடங்களில் பாலியல் லஞ்சம் வழங்கினாலே காரியம் நடக்குமளவுக்கு, நிலைமை எல்லைமீறிப் போய்க்கொண்டிருக்கிறது.

இத்தனை நாளும் சமூகமட்டத்தில் கீழ்நிலையில் இருக்கும் பெண்களே இப்படியான பாலியல் வதைகளை எதிர்கொள்கின்றனர் என்ற மனோநிலையே பலருக்கும் இருந்தது. ஆனால் , உண்மை அதற்கு நேர்மாறானது. பரிதாபம் என்னவெனில், மேல்மட்டத்தில் நடக்கும் பல அக்கிரமங்கள் நான்கு சுவர்களுக்குள் முடக்கப்பட்டு, வெளித்தெரியாமல் புதைக்கப்பட்டு விடுகின்றன. அதனாலேயே அடித்தட்டு பொருளாதார நிலையுடைய பெண்கள் மட்டுமே பாலியல் சுரண்டல்களைச் சந்திப்பவர்கள் என்ற தவறான கருதுகோள் நிலைத்துவிட்டது. இந்தக் கருதுகோள்களைப் பொய்ப்பிக்கும் வகையில்தான் பல சம்பவங்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

அமெரிக்க அதிபராக இருந்த பில் கிளிண்டனால், அவரது உதவியாளராக இருந்த மோனிக்கா லெவின்ஸ்கி பாலியல் துன்புறுத்தலுக்குள்ளானார். தமிழ்க் கவிதையுலகில் கவிப்பேரரசராக உலாவரும் வைரமுத்து, பாடகி சின்மயியிடம் தவறாக நடக்க முற்பட்ட விடயம், பல ஆண்டுகளுக்கு பின்னர் வெளிவந்து, அதைப் போல பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்கள் ‘மீ ரூ’ மூலம் அம்பலப்படுத்திய உண்மைகளால பல உயர்மட்ட ஆண்களின் அரிதாரம் கலைக்கப்பட்டது. இந்த வரிசையில் தான் சமீபத்திய வரவாக ஆஸ்திரேலிய கல்வி மற்றும் இளைஞர் விவகார அமைச்சரின் பாலியல் விவகாரமும் சேர்ந்திருக்கிறது.

பெண்களின் பாதுகாப்பற்ற நிலை, பொருளாதார இயலாமை, நிர்க்கதியான சூழமைவு போன்ற கையறுதன்மையை தமது பாலியல் வேட்கையைத் தீர்க்கும் கருவிகளாக மாற்றும் பெண்ணுடல் விழுங்கும் விலங்குகளின் மனோநிலையை முற்றாக ஒழிக்க வேண்டுமானால், சட்டங்கள் இன்னும் இறுக்கமாக்கப்பட வேண்டும். “பெண் மீது கைவைத்தால் வெட்ட வேண்டியது கையை அல்ல, தலையை!” என்ற பாகுபலி பட வசனத்தைப் போல, சட்டங்கள் மூலம் தண்டனைகள் கடுமையாக்கப்பட்டால், அதிகாரச் சாட்டையைக் கையிலெடுத்து , பெண்களைத் துகிலுரிய நினைக்கும் துச்சாதனன்களும், துரியோதனன்களும் மெல்ல மெல்ல அடங்கி, அறவே இல்லாமலே போய்விடக்கூடும். முன்னொரு பொழுதில், தாயகத்தில் பெண்களை மனதால் கூட எவனும் வன்புணர நினைக்கமாட்டான். காரணம், அப்போதிருந்த எமது நிழல் அரசாங்கத்தின் சட்டதிட்டங்கள். அந்தப் பொற்காலம் உலகெங்கும் மீளுயிர் பெற்றால், பெண்ணுடல் மோகிகளின் ஆட்டம் இருக்குமா?



# வேறுமாதிரி போர்க்கதை கூறும் ஈழத்தின் ‘வெந்து தணிந்தது காடு’

இலங்கையில் சினிமாத்துறை வளர்ச்சிக்கு தமிழர்களே அடித்தளமிட்டனர். ‘கடவுன பொறந்துவ’ என்ற முதலாவது சிங்கள படத்தின் தயாரிப்பாளர்கூட தமிழர்தான். ஏன் அந்த படத்தின் கதாநாயகிகூட தமிழ்ப் பெண்தான். ஆனால் இன்று சிங்கள சினிமா கோலோச்சியுள்ளது. வருமானம் உழைக்கக்கூடிய சிறந்த துறையாக மாறியுள்ளது. ஆனால் தமிழ் சினிமாவின் வளர்ச்சி என்பது ஆமை வேகத்திலேயே உள்ளது. அதன் ஓட்டமானது குறும்படம் என்ற வட்டத்துக்குள்ளேயே முடங்கிப்போயுள்ளது.

தென்னிந்திய சினிமாவின் ஆக்கிரமிப்பும் இதற்கு ஓர் பிரதான காரணமாகும். இதனால் பெரும் செலவில் படமெடுக்க எவரும் முன்வருவதில்லை. அவ்வாறு வந்தாலும் எம்மவர்கள் அதற்கு ஆதரவளித்து, கலைஞர்களை ஊக்குவிப்பதில்லை என்பதே கசப்பான உண்மையாகும். தென்னிந்திய படங்கள் வெளிவரும்போது பாலாபிஷேகம் செய்யுமளவுக்கு பரந்த மனம் படைத்த எம்மவர்கள், ஈழத்து சினிமாவையும் நேசிக்க வேண்டும். கலைஞர்களுக்கு நேசக்கரம் நீட்ட வேண்டும். அப்போதுதான் ஈழத்து சினிமா எழுச்சி - வளர்ச்சி பெறும்.

பல சவால்களுக்கு மத்தியில் ஈழத்திலிருந்து ‘வெந்து தணிந்த காடு’ என்ற படம் பிரசவிக்கப்பட்டுள்ளது. வலிகளை தாங்கிக்கொண்டு சுகப்பிரவசம் செய்யப்பட்டுள்ளது. அப்படத்தின் இயக்குநர் எதிரொலிக்கு வழங்கிய நேர்காணல் வருமாறு,

**கேள்வி - வெந்து தணிந்தது காடு என்ற தலைப்பை தேர்ந்தெடுக்கமைக்கான காரணம் என்ன?**

**பதில் -** இந்தப்படம் ஆரம்பிக்கப்படும் போது எமக்கு நடந்த கதையை உலகின் ஏனையோருக்கும் சொல்ல வேண்டும் என்ற எண்ணமிருந்ததால் Dark days of heven என்ற ஆங்கிலத் தலைப்பே இடப்பட்டிருந்தது. ஆனால் படப்பிடிப்பை முடித்து, படத்தின் பின்கள வேலைகள் ஆரம்பிக்கும்போதுதான் இத்திரைப்படம் ஈழ சினிமா வரலாற்றில் மட்டும் அல்ல - ஒட்டு மொத்த இலங்கையிலுமே ஒரு வரலாற்றுப் பதிவாக அமையப்போகின்றது என்பதை உறுதிபட அறிந்துகொண்டோம்.

வரலாற்றில் இடம்பிடிக்கப்போகும் தமிழ்ப் படம் ஒன்று ஆங்கிலத் தலைப்பில் இருப்பது எனக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. ஆனால் தமிழ் தலைப்பாக ”வெந்து தணிந்தது காடு” என தேர்ந்து எடுத்தாலும் அதை வைப்பதில் சின்ன தயக்கம் இருந்தது. அதற்கு காரணம், அதற்கு அடுத்துள்ள வரியாகும். தமிழ் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ என்ற வசனம் சில வேளை படத்தின் நோக்கத்தை வேறு திசைக்கு நோக்கப்பட்டுவிடுமோ என்ற பயத்தில் எனது பேஸ்புக்கில் படத்தலைப்புக்கு பகிரங்க அழைப்பு விட்டேன்.

ஆனால் எனக்கு இதற்கு இணையாக எந்த தலைப்பும் கிடைக்காத பட்சத்தில் இத்தலைப்பையே வைப்போம் என்ற முடிவில் வைத்தேன்.




**கேள்வி : இதே தலைப்பில் சிம்புவின் நடிப்பில் கௌதம் மேனன் இயக்கத்தில் ஒரு படத்தின் பெர்ஸ்ட்லுக் வந்தவுடன் உங்கள் மனநிலை எப்படி இருந்தது?**

**பதில் -** இத்தலைப்பு என்பது எனக்குச் சொந்தமானது அல்ல. அது ஒட்டு மொத்த தமிழுக்கு சொந்தமானதாகும். அதை விட ஒரு திரைப்படத்துக்கு நான் முதலில் வைத்துக் கொண்டாலும் சட்டரீதியாக இதை அணுக முடியாது. காரணம் இரண்டும் வெவ்வேறு நாடாகும்.

இது தொடர்பான பேச்சுவார்த்தையை இயக்குனரும் தயாரிப்பாளருமான சுரேஷ் காமாட்சி அண்ணன் தான் அப்படக்குழுவினருடன் மேற்கொண்டார். எனது நிபந்தனை என்ன எனக் கேட்ட போது நான் சொன்னது, இது பொதுத் தலைப்பாகும். ஆனால் திரைப்படம் இந்தியாவில் உள்ள OTT க்கு விற்பனை செய்வதில் தான் இடர்பாடாகும் என சொன்னேன்.

அதன்பின்னர் தங்களால் அதற்கு எத்தடையும் வராது என அதன் தயாரிப்பாளர் ஐசரி கணேஷ் உறுதியாகச் சொல்லி விட்டார். இதற்காக குரல் கொடுத்த அனைத்து சகோதரங்களுக்கும் எனது நன்றியைக் கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

**கேள்வி - கௌதம் மேனனின், வெந்து ‘தணிந்தது காடு’ மதி சுதாவின் வெந்து தணிந்தது காடு என்று பெயரிடுதல் மூலம் பிரச்சினை தீர்க்கப்பட்டதாக அறிந்தோம். ஆனால் அது சரியான தீர்வா? தமிழ்நாட்டில் இவ்வாறு ஒரே பெயருடன் இரண்டு இயக்குநர்கள் திரைப்படத்தை எடுக்க முடியுமா..? அப்படியிருக்கும் போது இது தீர்வாக எப்படியிருக்க முடியும்..?**

(07ஆம் பக்கம் பார்க்க)



# வேறுமாதிரி போர்க்கதைக் கூறும் ஈழத்தின் 'வெந்து தணிந்தது காடு'

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பதில் -** இதை அவர்கள்தான் முன்வைத்தார்கள். அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இது எனது கதையல்ல, நான் கண்ட கதைகள். அதனால் இப்படைப்பை எனக்கு உரிமம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை . அத்துடன் இது மக்களால் உருவாக்கப்பட்ட திரைப்படமாகும். இதில் என்பணி எல்லாவற்றையும் ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைத்தமை மாத்திரமே. அதனால் எனது படம் என என்னால் சொல்ல முடியாது. ஈழத்தின் வெந்து தணிந்தது காடு என்ற பெயரை நானே முன் மொழிந்ததுடன் அதனையே பயன்படுத்துவேன்.

**கேள்வி : 'வெந்து தணிந்தது காடு' பதுங்கு குழிக்குள் மூடப்பட்ட எங்களின் கதைகள் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படியானால் இது போர்க்காலத்தைப் பேசும் படமா? அப்படியாயின் போர்க்காலத்தில் நடைபெற்ற அழிவுகளை, அநீதிகளை வெளிப்படுத்துமளவுக்கு இலங்கையில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் இருக்கின்றதா?**

**பதில்:** எல்லோரும் அப்படித் தான் இத்திரைப்படத்தை நினைக்கின்றார்கள். அப்படி நினைப்பவர்களுக்கு இத்திரைப்படம் பிடிக்காது என்பதை முன் கூட்டியே தெரிந்து வைத்துக் கொண்டு தான் இத்திரைப்படத்தில் கை வைத்தேன்.

எங்களுக்கு மட்டுமல்ல இந்த உலகத்தில் எவர்க்குமே போர் வேண்டாம் என்பது தான் படத்தின் கருவாகும். இதில் எந்த அரசியல் தரப்பின் நிலைப்பாடுகள் குறித்தும் பேசப்படவில்லை.

குறிப்பாகச் சொன்னால் படத்தில் எந்த ஆயுதமோ, பிணமோ கூடக் காட்டவில்லை.

உதாரணத்திற்கு நான் ஒரு எழுத்தாளராக மட்டும் இருந்தால் நான் கூறும் விடயங்களால் எனக்கும் அதை வெளியிட்ட பதிப்பகத்துக்கும் மட்டும் தான் சிக்கல் வரலாம். ஆனால் இது 24 தொழில் பிரிவுகளைக் கொண்ட துறையாகும். நான் விடும் ஒரு தவறு குறைந்தது 50 பேரையாவது பாதிக்கும்.

அத்துடன் எந்தவொரு சூழ்நிலையிலும் நான் இந்த நாட்டை விட்டு வெளியேறி வாழ விரும்பாத ஒருவனாக பல சந்தர்ப்பங்களை தவிர்த்தும் இருக்கின்றேன். அப்படி ஒரு சூழ்நிலையில் இந்த நாட்டின் இறையாண்மைக்கு கட்டுப்பட்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு நானே விதித்துக் கொண்டதாகும்.

**கேள்வி: அவ்வாறு இல்லையாயின் எப்படி நீங்கள் போர்க்காலக்கதையைச் சொல்லப் போகிறீர்கள்?**

**பதில் :** ஏன் போர்க்காலக் கதைகளில் போரைத் தான் பேச வேண்டுமா ? (சிரிப்புடன்) நான் கடந்து வந்த வாழ்க்கையைப் பதிய வேண்டும் என்பது எனது கடமையாகும். சில வேளை அதற்காகத் தான் நான் உயிர்பிழைக்க வைக்கப்படடுக் கூட இருக்கலாம். அந்தப் போருக்குள் இருக்கும் மனிதர்களுக்கிடையில் இருக்கும் உணர்வுப் படுகொலைகளையும் உணர்வுத் தற்கொலைகளைப் பற்றியும் பேசலாமல்லவா?

**கேள்வி: வெந்து தணிந்தது காடு திரையரங்குகளில் வெளியாகுமா? ஆமெனில் அதற்காக தணிக்கைச் சான்றிதழ் பெறும் போது போர்க்காலக் கதைக்கு எப்படி தணிக்கைச் சான்றிதழ் கிடைக்கும்?**

**பதில்:** ஒரு திரைப்படம் என்பது திரையரங்கு ஒன்றில் பார்க்கும் போது தான் அது தனது முழு அனுபவத்தையும் பகிரும். ஆனால் தற்கால சூழல் எந்தளவுக்கு அதற்கு இடம் கொடுக்குமோ தெரியாது.

படத்தின் திரைக்கதையை வடிவமைக்கும் போது தணிக்கையையும் கருத்தில் கொண்டு இலங்கையின் இறையாண்மைச் சட்டம் எவற்றைச் சொல்ல அனுமதிக்குமோ அதற்குள் என்னால் எந்தளவு ஆழமாகச் சொல்ல முடியுமே அந்தளவுக்கு ஆழமாகச் சொல்லியிருக்கின்றோம்.

நிச்சயம் இத்திரைப்படத்துக்கு தணிக்கை கிடைத்திருக்காவிடில் எனது திரை வாழக்கை இத்துடன் முடிவுக்கு வந்து விடும். காரணம் உம்மாண்டி என்ற திரைப்படத்தை எடுக்க முனைந்து, அதனால் ஏற்பட்ட சில லட்சம் கடனில் இருந்து மீள எனக்கு முழுமையாக 4 வருடங்கள் எடுத்துக் கொண்டது.

இதற்கும் அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் 158 பேரிடமும் இருந்து பெற்ற 30 க்கு மேற்பட்ட இலட்சங்களை அளிப்பதற்கு இன்னும் 5 வருடங்களாகும் என நினைக்கின்றேன்.

**கேள்வி: ஓ.டி.டி தளத்திலும் இந்தப் படம் வெளியாகுமென நீங்கள் சொன்னதாக ஞாபகம். அப்படியாயின் அதற்கேற்ற வகையில் இந்தப்படம் உருவாக்கப்பட்டதா? ஈழத்து சினிமாவுக்கான ஓ.டி.டி வாசலை உங்கள் படம் திறந்து வைப்பதாகக் கொள்ளலாமா?**

**பதில்:** OTT க்கு என திரைப்படம் செய்வது என்ற முறை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அது பற்றி நான் எங்கும் கற்கவுமில்லை. எனக்குத் தெரிந்து ஒரு சில திரைப்படங்களைத் தவிர ஏனையவை எல்லாம் திரையரங்கில் வெளியிட முடியாமல் விற்கப்பட்டவைதானே. குறிப்பாகச் சொல்லப் போனால் OTT திரைப்படங்களில் இடைவேளை என்ற வசனம் வருவதில்லை.

எனது திரைப்படத்தில் நான் அப்படி ஒரு இடைவேளையை வைக்க முடியாது. அப்படி வைத்திருந்தால் இத்திரைப்படம் நிச்சயம் தான் கடத்த விரும்பும் உணர்வை பார்வையாளனுக்கு கடத்த முடியாமல் தோற்றிருக்கும். இதை ஏன் சொல்கின்றேன் என்பது திரைப்படத்தை பார்க்கும் போது உங்களுக்கே புரியும்.

**கேள்வி: திரையரங்கு- ஓடிடி இதில் எமக்கு பொருத்தமான களம் எதுவென எண்ணுகிறீர்கள்?**

**பதில் -** வியாபார ரீதியாகப் பேசும் போது எமக்கு திரையரங்க வெளியீட்டில் தான் அதிக வருவாய் இருக்கும் என்பது எனது கணிப்பாகும். காரணம் நான் உட்பட பெரும்பாலானவர் ஆரம்ப காலத்தில் இருந்து திருட்டு கசெட் பின்னர் திருட்டு வீசீடி என ஒவ்வொரு படிமுறை கடந்த தொழில்நுட்ப வடிவத்தில் பெரும்பாலான படங்களை திருட்டுத் தனமாகத்தான் பார்த்திருக்கின்றோம்.

எமது மக்களிடையே எமது சினிமாவின் வெற்றி தொடர்பான விழிப்புணர்வு ஏற்படும் வரை OTT என்பது எமக்கு 50-50 என்ற அளவில் பேச வேண்டிய ஆபத்தான முயற்சிதான். இதை ஏன் கேட்கின்றேன் என்றால் ஒரு நாளைக்கு குறைந்தது 5 பேராவது "வெந்து தணிந்தது காடு" திரைப்படத்தின் யூரியூப் லிங் கேட்ட வண்ணமே உள்ளார்கள்.

அந்த மடல்களைப் பார்க்கும் போது நெஞ்சு ஒரு தடவை "பக்" என நின்று விட்டுத் தான் துடிக்கின்றது. விளம்பரச் செலவுகள் தவிர தற்போதே 33.5 இலட்சங்களாகிவிட்டன. இப்படியான உறவுகளை நம்பி வெளியிட்டால் என் கதை இதோடு முடிந்தது.

அதற்காக எமக்கு OTT தளம் சாத்தியமில்லை என்ற கருத்தை நான் முன் வைக்கவில்லை. எங்களுக்கு என்றொரு சினிமா ஏன் வேண்டும் என்ற விழிப்புணர்வு மக்களுக்கு தேவை. அத்துடன் எமது படைப்புக்களுக்கென்று ஒரு OTT தளம் நிச்சயம் அவசியமாகும். அதில் ஒரு பெரிய உலக வெளிச்சம் பெற்ற எம்மவர் திரைப்படம் வெளியானால் கூட மற்றைய இனத்தவர்களே எம் தளத்துக்கு வந்து பார்த்து எமது OTTஐ காப்பாற்றுவதற்கும் சந்தர்ப்பம் உண்டு. அதற்காகவும் நாம் ஒரு பக்கம் போராடத் தான் வேண்டும்.

**கேள்வி - எப்போது படம் வெளியாகும்?**

**பதில் -** இக் கேள்வியை நானும் என்னை நோக்கி அடிக்கடி கேட்டுக் கொண்டு தான் இருக்கின்றேன். ஆக்கப் பொறுத்தேன் கொஞ்சம் ஆறப் பொறுக்க வேண்டியுள்ளது.

ள**கேள்வி, ஈழத்தில் எடுக்கப்படுகின்ற திரைப்படங்கள் மக்களுக்கு தெரியாமலேயே மறைந்து போகின்றன..?**

**பதில்:** பாவம் மக்கள், அவர்களை அடிக்கடி குற்றம் சுமத்தக் கூடாது. அதுவும் எல்லா வகையான நெருக்கடி நிறைந்த இந்த நாட்டில் மக்களால் சினிமாவை மட்டும் பின் தொடர்ந்து கொண்டிருக்க முடியாது. எல்லாவற்றையும் விட ஈழத்தில் எடுக்கப்படுகின்ற படைப்புக்களை அங்கு இயங்கிக் கொண்டிருக்கும் பல கலைஞர்களே பார்ப்பதில்லை. அப்படி இருக்கையில் மக்களை எப்படி எம்மால் குற்றம் சொல்ல முடியும்.

**கேள்வி: ஈழத்தில் எடுக்கப்படுகின்ற படங்கள் புலம்பெயர் தேசங்களை நோக்கியே விரட்டப் படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா..? அத்துடன் புலம்பெயர்ந்த நாடுகளில் வழங்கப்படும் விருதுகளின் வழியே கிடைக்கும் பரிசுத்தொகையின் ஊடாக செலவினங்களை ஈடு செய்யலாம் என எண்ணுகிறீர்களா..?**

**பதில்:** எதனடிப்படையில் இக்கேள்வி என எனக்குப் புரியவில்லை ஆனால் எனக்கு விளங்கிக் கொண்ட வகையில் பதில் தருகின்றேன். ஈழத்துக்கென்றொரு சினிமாவை உருவாக்கும் முயற்சியில் வெளிநாட்டில் உள்ளவர்கள் மிக முக்கியமான ஒரு இடத்தில் தான் இருக்கின்றார்கள். காரணம் இங்கு ஒருவர் திரையரங்கிற்கு பணம் செலுத்திப் பார்க்கும் பணத்தின் பெறுமதியானது அங்குள்ளவர்களுக்கு ஒரு தேநீர் அருந்தும் தொகைக்கு சமமானதாகும்.

ஆனால் விருதுகள் பரிசுகள் மூலம் வருவாய் கிடைக்குமா என்றால் அதற்கு பதில் இல்லை அதற்கு காரணம் திரைப்படங்களுக்கென்று எந்த விருது விழாவும் இல்லை (பணப்பரிசளிக்கும்).

முன்னர் சங்கிலியன், நாவலர், கனடிய தமிழ் திரைப்பட விழா போன்ற பணப்பரிசளிக்கும் விழாக்கள் இருந்தன. அத்துடன் விம்பம் தற்போதும் இயங்கிய வண்ணமே உள்ளது. இவற்றை விட பணம் செலுத்திப் பங்கு பற்றும் விழாக்கள் தான் எம்மவரிடம் கூட இருக்கின்றது. அதற்கு செலுத்தும் பணத்திலேயே ஒரு குறும்படம் எடுத்தும் விடலாம்.

வேறு மொழிக்காரரால் ஏற்பாடு செய்யப்படும் சர்வதேச விருது விழாக்களில் திரைப்படங்களுக்குரிய வருவாய் கிடைக்க சந்தரப்பம் உண்டு. ஆனால் பணப்பரிசளிக்கும் திரைப்பட விழாக்கள் எமக்குள் இதுவரை இல்லை. அப்படி உருவானால் பெரிதும் சந்தோசப்படுவேன்.

**கேள்வி: ஜெய் பீம் அசுரன் போன்ற படங்கள் உண்மை சம்பவங்கள் தாங்கிய படங்கள். அப்படங்கள் கதை சொன்ன விதம் மக்களை கட்டிப்போட்டுள்ளது. அவ்வாறு வெந்து தணிந்த காடு இருக்குமா.?**

**பதில்:** இக் கேள்விக்கு பார்வையாளனால் தான் பதில் சொல்ல முடியும், நான் சொல்ல முடியாது. என்ன இருந்தாலும் நீங்கள் குறிப்பிட்ட படங்களுடன் எனது படத்தை நான் ஒப்பிட விரும்பவில்லை. காரணம் முடிந்தவரைக்கும் யாதார்த்தத்தைக் குறைக்கும் சினிமாத் தனங்களை எனது படத்தில் இருந்த காட்சிகள் பலவற்றை நீக்கி உருவாக்கியிருந்தேன். அதற்காக முன் முடிவுகளுக்கு வரவேண்டாம். சினிமாத்தனம் கலந்தால் தான் அது ஒரு சினிமாவாக முடியும் அல்லாமல் போனால் அவ்வடிவம் பார்ப்பவரை சரியான மனநிலைக்குள் வைத்திருக்காது.

**கேள்வி: OTT விற்பனை செய்கின்ற விடயம் புதிய விடயம் தானே, எவ்வாறு கண்டுபிடித்தீர்கள்..? இந்த விடயத்தை ஈழத்திலுள்ள இற்றைய இயக்குனர்களுக்கும் கொண்டுசெல்வீர்களா..?**

**பதில் -** இல்லையே, இப்போது OTT தொடர்பான அறிவு எல்லோருக்கும் உண்டு என நினைக்கின்றேன் . ஈழத்தில் இதுவரை ஒரு திரைப்படமும் வாங்கப்படவில்லை. நான் கூட முயற்சி தான் செய்து கொண்டிருக்கின்றேன். இக் கேள்விக்கு நான் மட்டுமல்ல நாம் தெரியாமல் இருக்கிறோம் என நினைப்பார்கள்.

**- ரெமிநேகா**

**Fish & Meat Cart**

Online Home Delivery

# YOU STAY SAFE AT HOME

# WE DELIVER

**FRESH HIGH QUALITY FISH & MEAT**

**HYGIENICALLY CLEANED & CUT TO YOUR SIZE NEEDS**

**0431-102-334**

SCAN THIS CODE
TO START A WHATSAPP CHAT WITH US

Fish And Meat Cart
WhatsApp business account

SOURCED FROM LOCAL SEAFOOD MARKETS & BUTCHERS



PRE-ORDER ONLY
ORDER BY 12 PM
FOR SAME DAY DELIVERY



ONLINE SHOP COMING SOON
WWW.FISHMEAT.COM.AU



# ஊடகப் பேராசான் ம.வ.கானமயில்நாதன்!

● நவீனன்

ஊடகத்துறையை ஒரு தொழிலாக எண்ணாமல், தன் வாழ்வாக, தவமாகக் கருதி ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக இயங்கிக் கொண்டிருந்த பேராளுமை ஒன்று கடந்த வாரம் தனது பேனாவை இறுக மூடி வைத்துவிட்டு ஓய்ந்திருக்கிறது. இலங்கைத் தமிழ் பத்திரிகை வரலாற்றில் இனி என்றைக்குமே தவிர்க்கப்பட முடியாத - தனியிடம் கொடுக்கப்படவேண்டிய

அந்தப் பேராசானின் பெயர் ம.வ.கானமயில்நாதன்!

யாழ். வட்டுக்கோட்டையில் 1942 ஜூன் 20ஆம் திகதி வல்லிபுரம் வள்ளியம்மை தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர் கானமயில்நாதன்.

1960களின் ஆரம்பத்தில் ஈழநாடு பத்திரிகையில் பயிற்சி உதவி ஆசிரியராக ஊடகப் பணியில் காலடி பதித்த அவர், பின்னர் கொழும்பில் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் உதவி ஆசிரியராக இணைந்துகொண்டார். அங்கு ஊடக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் அவர்களால் புடம்போடப்பட்டார். 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் திரும்பிய அவர், ஓரிரு வருடங்கள் வீரகேசரி பத்திரிகையின் யாழ். அலுவலக பொறுப்பாசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1985 நவம்பர் 26இல் உதயன் - சஞ்சீவி பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது அதன் பிரதம ஆசிரியராகப் பொறுப்பேற்று ஏறக்குறைய 35 வருடங்கள் உதயனுக்காகவே வாழ்ந்தார். இடையில் சில காலம் காலைக்கதிர் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் இருந்தார்.

அரச இயந்திரத்தின் அடக்குமுறைகளாலும் யுத்தக் கோரங்களினாலும் மக்களோடு மக்களாக உதயனும் பல்வேறு இன்னல்களை அடைந்தபோது, அதனைச் சோரவிடாது தாங்கிப்பிடித்து இன்றளவும் தூக்கி வந்தவர்களில் முதன்மையானவர் ஆசிரியர் கானமயில்நாதன். தினமும் அவர் செதுக்கிய ஆசிரியர் தலையங்கங்களும் 'வட்டூர் கானம்' என்ற பெயரில் எழுதிய பத்திகளும் தமிழ்த் தேசியப் போராட்டங்களின் ஒப்பற்ற சாட்சியங்கள்.

உண்மையில் அவர் அவ்வளவு கண்டிப்பான மனிதர் அல்லர்; அவரின் குரலும் கூட மென்மையானதுதான். ஆனாலும் காலையில் கலகலவென்று இருக்கும் ஆசிரியபீடம், ஆசிரியரின் மென்குரல் கேட்டவுடன் 'கப்சிப்' என்று அடங்கும். அவர் மீதான பயத்தினால் அல்ல; பக்தியால்!

அவர் தன் ஆசிரிய பீடத்தினரை ஆசானாக மட்டுமல்ல, தந்தையாகவும் இருந்து வழிநடத்தினார் ; வழிப்படுத்தினார். செய்திகளை எழுதும் போது தமிழை வலு இலகுவாக எழுதவேண்டும் என்பதில் கடுமையாக இருப்பார். "ஐசே நாங்கள் எழுதிற செய்திகள் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கு மட்டு மில்லை, சாதாரண பாமரனுக்கும் விளங்கவேணும்" என்று அடிக்கடி அறிவுறுத்துவார். சின்னச் சின்ன ஊர்களில் நடக்கும் திருவிழாக்கள், நிகழ்வுகள் பற்றிய செய்திகளுக்கும் கூட முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதில் எப்போதும் விடாப்பிடியாக இருப்பார்.

பிரதேசச் செய்தியாளர்கள் அனுப்பும் செய்திகளை முடிந்தவரை தவறவிடாமல், சின்னதாக வேனும் போடுங்கள் என்பார். பெரும்பாலான பிரதேச செய்தியாளர்கள் எப்போதாவதுதான் அலுவலகத்துக்கு வருவார்கள். அந்த நேரத்தில் தாம் எப்படிப்பட்ட வேலையில் இருந்தாலும், அவர்களை அழைத்து, நலம் விசாரித்து கனிவோடு பேசுவார் ஆசிரியர் கானமயில்நாதன்.

"பத்திரிகைக்காரனுக்கு வேலை நேரம் என்ற ஒன்று கிடையாது. எப்போதும், எங்கேயும், எதையும் செய்திக் கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும் ; சிந்திக்கவேண்டும். செய்தி உங்களைத் தேடி வராது; நீங்கள்தான் செய்தியைத் தேடிப்போகவேண்டும்; தேடி ஓடவேண்டும்" என்று இளம் ஊடகர்களுக்கு அவர் கொடுப்பது அறிவுரை மாத்திரமல்ல; ஊடகத்துறை மீதான ஊக்க மருந்தும் கூட!

செய்திகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திய பின்னரே வாசகனுக்குக் கொடுக்க



வேண்டும். பொய்யான செய்தி ஒன்று கூட பத்திரிகையில் வந்துவிடக்கூடாது என்பதில் எப்போதும் உறுதியாக இருந்தவர் ஆசிரியர் கானமயில்நாதன்.

ஈழத்துத் தமிழ் ஊடகத்துறையில் அவர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாக இருந்தார் என்று கூறினால் மிகையல்ல.

உதயன் மீது ஒவ்வொரு முறையும் தாக்குதல்கள் நடத்தப்பட்ட போதும், ஊடகவியலாளர்களும் பணியாளர்களும் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட போதிலும், ஒருநாள் கூட தவறாமல் பத்திரிகையை வெளிக்கொணர்ந்த முக்கிய உந்துசக்திகளில் ஒருவராக ஆசிரியர் இருந்தார்.

22.11.2021 அன்று இவ்வுலகை விட்டு மறையும் வரை அவரின் பேச்சும் மூச்சும் சிந்தனையும் ஊடகத்துறைக்காகவே இயங்கிக்கொண்டிருந்தன.

உதயன் - சஞ்சீவி முளைத்து, வளர்ந்து, விருட்சமாவதற்கு வெளித் தெரியா வேராக வாழ்ந்தீர்களே! உதயனுக்கும் நீங்கள் வளர்த்த அடுத்த தலைமுறை ஊடகர்களுக்கும் உரமாக இருப்பீர்கள் இனி எப்பொழுதும். போய் வாருங்கள் ஐயனே!

# H.N. PAWN BROKER
# எச்.என். அடகு கடை

- குறைந்த வட்டி வீதம்
- சேவைக்கட்டணம் இல்லை
- நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
- சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**தங்கப்பவுணுக்கு அதிகூடிய முற்பணம் வழங்கப்படும்**



**வட்டி 3%**

Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175
Tel/Fax : 03 8712 1406, Ruban : 0423 094 478



**நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த - 10 வருடகால அனுபவமுள்ள...**

# PERPETUA TRADE

## Money Transfer Worldwide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK | BOC | PEOPLE'S BANK | SEYLAN BANK PLC | HNB | SampathBank | NSB National Savings Bank | Cash Xpress

**Send Money to any Bank In Sri Lanka**

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com



# சொலமன் தீவுகள்!

> சீனாவுடன் இல்லாமல், தைவானுடன் மட்டும் அரச உறவு வைத்துக் கொண்டிருந்த மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நாடுகளில் சொலமன் தீவுகளும் ஒன்றாகும். ஆனால், கடந்த 2019 செப்டம்பர் மாதம், சொலமன் தீவுகளின் பிரதமர் சீனாவுடன் அதிகாரப்பூர்வ அரச உறவை ஏற்படுத்திக் கொண்டார்.

**கோகுலன், சிட்னி**

ஆஸ்திரேலியாவின் வடகிழக்கில் அமைந்துள்ள அழகிய நூற்றுக் கணக்கான தீவுகள் அடங்கிய நாடுதான் சொலமன் தீவுகள். ஆனால் நவம்பர் மாத இறுதியில், இவ்வழகிய தீவுகளின் தலைநகரமான ஹோனியாரா, ஒரு கலவர பூமியாக மாறியிருந்தது.

தலைநகரின் வீதிகள் முழுவதும் வன்முறையும், சூறையாடுதலும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. குறிப்பாக நாடாளுமன்ற வளாகம் மற்றும் சீனர்கள் நடத்திய நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனையடுத்து சில உயிரிழப்புகள் ஏற்பட, நிலைமை கட்டுக்கடங்காமல் போனது.

சொலமன் தீவுகளின் பிரதமர் மனாஸ்ஸே சோகவேரே, ஆஸ்திரேலியா போன்ற பசுபிக் நாடுகளின் உதவியை வேண்டினார். இதனடிப்படையில் ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மொரிசன், 23 ஆஸ்திரேலிய பொலிஸ் அதிகாரிகள் மற்றும் 46 ஆஸ்திரேலிய இராணுவ அதிகாரிகள் உள்ளடங்கிய அமைதிப் படையை உடனடியாக சொலமன் தீவுகளுக்கு அனுப்பிவைத்தார்.

### கலகத்திற்குக் காரணம் சீனாவா? தாய்வானா?

இந்த வன்முறைகளுக்கு முக்கிய காரணமாக இருப்பது, சொலமன் தீவுகள் அரசின் புதிய வெளியுறவுக் கொள்கை.

சீனாவுடன் இல்லாமல், தைவானுடன் மட்டும் அரச உறவு வைத்துக் கொண்டிருந்த மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நாடுகளில் சொலமன் தீவுகளும் ஒன்றாகும். ஆனால், கடந்த 2019 செப்டம்பர் மாதம், சொலமன் தீவுகளின் பிரதமர் சீனாவுடன் அதிகாரபூர்வ அரச உறவை ஏற்படுத்திக் கொண்டார்.

தைவானிடமிருந்த அரச உறவை, சீனாவிடம் மாற்றிக் கொண்டதன் மூலம் சுமார் 730 மில்லியன் ஆஸ்திரேலிய டாலர்கள் நிதி உதவியை சொலமன் தீவுகளுக்கு சீனா வழங்கவுள்ளதாக செய்திகள் வெளியாகின.

இதன் காரணமாக, தைவான், சொலமன் தீவுகளுடன் உள்ள தனது அரசாங்க உறவை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

தைவான், சொலமன் தீவுகளுக்கு கடந்த 36 வருடங்களாக பல உதவிகளைப் புரிந்துள்ளது. சமீபத்தில், கொரொனா நிவாரணப் பணிகள், மருத்துவ உபகரணங்கள் என தேவையான முக்கிய உதவிகளைச் செய்துள்ளது.

இதனால் அரசியல் ரீதியாகவும், மக்கள் மூலமாகவும் அரசாங்கத்திற்கு இந்த முடிவுக்கு எதிரான குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. குறிப்பாக, மலாய்ட்டா தீவுப் பகுதியின் முதலமைச்சர் டானியல் சுடானி, இந்த அரசாங்க இராஜதந்திர உறவு மாற்றத்தை வன்மையாகச் சாடினார்.

எனவே, அமைதியான முறையில், அரசுக்கு எதிராக தொடங்கப்பட்ட போராட்டம், பின்னர் கிளர்ச்சியாளர்களால் வன்முறையாகிப் போனது. சுமார் 1000க்கும் மேற்பட்டவர்கள் இந்தப் போராட்டத்தில் பங்குபெற்றுள்ளனர். குறிப்பாக மலாய்ட்டா எனும் தீவுப்பகுதியிலிருந்து பெரும்பாலான மக்கள் கலந்து கொண்டுள்ளனர். மலாய்ட்டா பகுதியினருக்கும், ஹோனியாரா பகுதியில் வாழும் குடா கனால் தீவு மக்களுக்கும் ஏற்கனவே இருந்த வன்முறை வரலாற்றை இங்கே நினைவு கூரப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது.

### சொலமன் தீவுகள் நாட்டின் விவகாரத்தில், ஆஸ்திரேலியா ஏன் தலையிட வேண்டும்?

சொலமன் தீவுகளில் இது போன்ற கலவரம் நடப்பதும், ஆஸ்திரேலியா அமைதிப் படையை அனுப்புவதும் இதுவே முதல் முறை என்று கூற இயலாது.

இதற்கு முன் சுமார் 14 ஆண்டுகள், அதாவது 2003 முதல் 2017 வரை, ஆஸ்திரேலியாவின் பெடரல் பொலிஸ் படையும், இராணுவமும் சொலமன் தீவுகளின் அமைதிப் பணியில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

இதற்கும் ஒரு வரலாறு உண்டு. 1998 முதல் 2003 வரை சொலமன் தீவுகளில் இரண்டு இனக் குழுக்களுக்கு இடையே வன்முறை ஆயுதம் தாங்கிய தாக்குதலாக மாறிப் போனது. அதன் பிறகு, அந்நாட்டின் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு ஏற்ப, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் 13 பசுபிக் நாடுகள் உள்ளடங்கிய RAMSI எனப்படும் சொலமன் தீவுகளுக்கான பிராந்திய உதவிக் குழுவை அனுப்பின.

சுமார் 14 ஆண்டுகள் நீடித்த அமைதிப் பணிக்கு, ஆஸ்திரேலியா சுமார் 2.8 பில்லியன் ஆஸ்திரேலிய டாலர்களைச் செலவழித்து. இந்த முயற்சிக்கு, 7200 இராணுவ வீரர்களும், 1700 பெடரல் பொலிஸ் அதிகாரிகளும் பங்களித்தனர்.

### அடுத்து என்ன நடக்கும்?

எதிர்க்கட்சிகளும், போராட்டத்தில் ஈடுபட்ட மக்களும், சொலமன் தீவுகளின் பிரதமர் பதவி விலக வேண்டும் எனக் கேட்டுள்ளனர்.

ஆனால், கடந்த 2019 ஆம் ஆண்டு தேர்தலில் மக்களின் வாக்குகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் பதவி விலகுவார் என எதிர் பார்க்க இயலாது. அடுத்த தேர்தல் 2023 ஆம் ஆண்டுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் போராட்டம் மீண்டும் ஒரு இனக் கலவரமாக மாறிவிடக் கூடும் என்கிற பயமும் அண்டை தீவு நாடுகளிடையே உள்ளது.

அதை விட அதிகமாக, சீன கம்யூனிஸ்ட் அரசாங்கம் தங்கள் தீவுகளை கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிடும் என்கிற சந்தேகமும் மக்களுக்கு இருக்கிறது.

இந்நிலையில், தங்கள் அமைதிப் படையின் இருப்பு, சொலமன் தீவுகளில் அமைதியை நிலைநாட்டுவதற்கான உதவி மட்டுமே, அந்நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடும் எண்ணம் இல்லை எனவும், ஆஸ்திரேலியாவின் பிரதமர் உறுதி அளித்துள்ளார்.

# இயற்கையைக் கொண்டாடுதல்



தை மாதம் தமிழர் வாழ்வில் மிக முக்கிய மானதொன்றாக விளங்குகின்றது. இயற்கைக்கு மதிப்பளிப்பதும் நன்றி செலுத்துவதும் தமிழர் பாரம்பரியத்தின் உள்ளார்ந்த அம்சமாகும். பண்டைய தமிழர்கள் இயற்கையை தங்கள் வெற்றிகரமான வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதி, தமிழ் நாட்காட்டியின் முதல் மாதமான 'தை' முதல் நாளில் இயற்கையை கொண்டாடினர்.

அறுவடையின் நிறைவாகவும் - வளமும் மகிழ்வும் பொங்கும் புதிய ஆண்டின் தொடக்கமாய் அமையும் இந்த 'தைப்பொங்கல்' கொண்டாட்டம் தமிழர்களின் மிகப் பிரதானமான பண்டிகையாக அமைகின்றது. மேலும் சமூக மற்றும் மத வேறுபாடுகளை கடந்து அனைவரும் இணைந்து இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் கொண்டாடப்படும் இப்பண்டிகை, தமிழர்களை ஒன்றிணைக்கின்ற - இன்றைய காலத்திற்கும் பொருந்தும் தமிழர் வாழ்வியலின் சிறப்பான பல அம்சங்களை மற்றைய சமூகங்களோடு பகிர்கின்ற ஒரு தளமாகவும் அமைகின்றது.

இத்தகைய தை மாதத்தை "தமிழ் மரபுத் திங்கள்" என உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்துவதன் மூலம் பின்வருவன உட்பட பல நன்மைகளை நாம் பெறமுடியும்.

- தமிழ் மற்றும் தமிழர் வாழ்வியலை எதிர்கால சந்ததியினர் அறிய / கற்க ஏதுவான நிலையான கட்டமைப்பை அரச ஆதரவுடன் கட்டியெழுப்பல்
- வளமான பயன்மிக்க தமிழ் மொழி / தமிழ் பாரம்பரியம்
- உயிர்ப்பு மிக்க தமிழ் ஆஸ்திரேலிய சமூகம் குறித்த ஆர்வத்தை / அங்கீகாரத்தை பரந்த ஆஸ்திரேலிய சமூகத்திடம் கூட்டுதல்
- தை மாதம் முழுவதும், ஆஸ்திரேலியா எங்கும் நிறுவன மயப்படுத்தப்பட்ட வகையில் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள் மூலம் ஆஸ்திரேலிய பல்லினக் கலாசாரத்துவத்திற்கு வலுச்சேர்த்தல்
- தேசத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் எங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தல் மற்றும் எம் சமூகத்தின் பங்களிப்பிற்கான அங்கீகாரத்தை உறுதிப்படுத்தல்
- "தமிழ் ஆஸ்திரேலியர்கள்" எனும் அடையாளதிற்கு வலுச்சேர்த்து உயர்த்துதல்
- "தமிழ் மரபுத் திங்கள்" பிரகடனம் எனும் இலக்கை அடைவதற்கு ஆஸ்திரேலியா எங்கும் பரந்து வாழும் நாம் ஒன்றிணைந்து எம் அனுபவங்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து செயற்படுவோம். முதலில் எங்கள் சமூகத்தில் இவ்விடயம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். கீழுள்ள எண்ணங்களை கருத்தில் கொண்டு கலந்துரையாடுவோம்.
- ஆஸ்திரேலிய தமிழ் அமைப்புக்கள் தம் நிறுவனவளவில், "தமிழ் மரபுத் திங்கள்" பிரகடனத்தை செய்து தை மாதம் முழுதும் கலாசார செழுமையைப் பறைசாற்றும் மற்றும் எல்லா சமூகங்களுக்கும் நன்மை தரக்கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ளல்
- உள்ளூர், மாநில மற்றும் மத்திய அரசு மட்டங்களில் தமிழ் பாரம்பரியம் மற்றும் தை மாதத்தின் கலாசார முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்
- பன்மொழிப் பத்திரிகைகள், அரச வெளியீடுகள், பிரதான ஊடகங்கள் போன்றவற்றில் தமிழ் பாரம்பரியம் பற்றிய கட்டுரைகளை வெளியிடுதல்.
- நகர சதுக்கம், நாடாளுமன்றம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பொங்கல் விழா, தமிழர் வாழ்வியல் கண்காட்சி போன்ற நிகழ்வுகளை நடாத்தல்

தமிழராய் இணைவோம் - சாதிப்போம்!!

**கு.சிவசுதன், விக்டோரியா**

# தமிழ் மரபுத் திங்கள்-ஆஸ்திரேலியா



உயிரும் உணர்வும் தந்த தாயக மண்ணிலிருந்து தேசங்கள் பல கடந்து வாழ்ந்தாலும், தாம் வாழும் இடமெங்கும் தமிழின் தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அயராது உழைக்கும் தம் வேர்களை மறக்காத தமிழர்கள், தை மாதத்தை 'தமிழ் மரபுத் திங்கள்' என தத்தமது நாட்டின் அரசாங்கங்களுக்கூடாக உத்தியோகபூர்வ மாகப் பிரகடனப்படுத்திட முனைப்புடன் செயற்பட்டு வருகிறார்கள்.

2010 ஆம் ஆண்டளவில் கனடாவில் உருப்பெற்ற இந்த எண்ணக்கரு, 2012 இல் டொரோண்டோ மாநகர சபையாலும், 2014 ஒண்டாரியோ மாநில அரசினாலும், 2016 இல் கனடிய ஒன்றிய அரசினாலும், தமிழ் கனடியர்கள் கனேடிய சமுதாயத்திற்கு ஆற்றிய பங்களிப்பையும், தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் செழுமையையும் கருத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்டு தை மாதம் 'தமிழ் மரபுத் திங்கள்' எனப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் வட கரோலினா மாநிலத்திலும், இம்மாதம் லண்டன் மாநகர சபையிலும் 'தமிழ் மரபுத் திங்கள்' அங்கீகாரத்தைப் பெற்றது.

இவ்வுலகலாவிய முயற்சிகளின் தொடர்ச்சியாக தமிழ் ஆஸ்திரேலிய செயற்பாட்டாளர்களும் இது குறித்து சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள்.

ஆஸ்திரேலிய மாநிலங்களில் எம் சமூகத்திடையே இது குறித்த கலந்துரையாடல், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இச் செயற்பாடுகள் குறித்து ஆஸ்திரேலிய மாநிலங்களின் செயற்பாட்டளர்களின் கருத்துக்களை இங்கு பிரசுரிக்கின்றோம்.

**தொகுப்பு : சினேகா**

# விக்டோரிய மாநில தை மாதம் சார் செயற்பாடுகள்



நான் அறிந்தவரையில் விக்டோரிய மாநிலத்தில் தை மாதம் சார் செயற்பாடுகள் 30 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகின்றன. 1990 இல் "இளம் தென்றல் கலாமன்றம்" பொங்கல் விழாவை ஒரு சமூக நிகழ்வாய் கொண்டாடியது. பின்னர் 1994 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை "விக்டோரிய தமிழ் கலாசாரக் கழகம்" பொங்கல் நிகழ்வை உள்ளக நிகழ்வாக கொண்டாடி வருகின்றது.

2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் மாநிலத்தின் நான்கு திசைகளிலும் பல அமைப்புக்கள் பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடிவருகின்றன.

2011 ஆம் ஆண்டு, மெல்பேர்னின் தென்கிழக்கு மூலையில் கேசி தமிழ் மன்றத்தினால் கொண்டாடப்பட்ட பொங்கல் விழா வளர்ச்சியடைந்து, 2019 ஆம் ஆண்டு "தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா" என அடையாளப்படுத்தப்பட்டு, வெளிக்கள மற்றும் உள்ளகக் கூறுகளைக் கொண்ட பிரதான நிகழ்வு - கன்னி விக்டோரியப் பாரளுமன்ற பொங்கல் விழா என இரு நாள் நிகழ்வாக நடைபெற்றது.

2020 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிகழ்வு, எந்தவொரு அமைப்பையும் முன்னிறுத்தாத - 18 தமிழ் அமைப்புகளின் கூட்டு முயற்சியாய் அமைகின்ற - எல்லோருக்கும் பொதுவான ஒரு விழாவாய் பரிணாம வளர்ச்சியடைந்தது.

2020 ஆம் ஆண்டிலிருந்து ஐந்து நாள் தமிழர் வாழ்வியல் கண்காட்சியும் "தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா" வின் ஓர் அம்சமாய் விக்டோரியப் பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்டு வருகின்றது.

2021 ஆம் ஆண்டு, விக்டோரியத் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு "தமிழ் மரபுத் திங்கள்" பிரகடனத்தை செய்யுமாறு தமிழ் அமைப்புகளைக் கேட்டுகொண்டது. அதன் பிரகாரம், "தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா" சார் அமைப்புகள் பல, கடந்த தைமாதத்தில் தமிழ் மரபுத் திங்களை குறிக்கும் முகமாய் பல நிகழ்வுகளை நடாத்தின. விக்டோரியத் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு தனது முக்கியமான செயற்திட்டங்களில் ஒன்றாய் "தமிழ் மரபுத் திங்கள்" பிரகடனத்தை முன்னிறுத்தியிருக்கின்றது.

**ச.சத்தியன், விக்டோரியா**

# தமிழ் மரபுத் திங்களும் தாஸ்மேனியாவும்



இந்த அழகிய தாஸ்மேனியாத் தீவிலே புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு தமிழ் மரபுரிமை மாதம், குறிப்பாகத் தைப்பொங்கல் விழா, என்பது தமிழ் உறவுகள் அனைவரும் ஒன்றுகூடும் ஒரு கொண்டாட்டமாக மாறியுள்ளது. தாஸ்மேனியத் தலைநகரம் ஹோபார்ட்டில் தாஸ்மேனியத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் 2018 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இடம்பெறும் தைப்பொங்கல் விழாவில் தாஸ்மேனியாவின் மூன்று பிராந்தியங்களிலிருந்தும் வரும் தமிழுறவுகள் இணைவது குறிப்பிடத்தக்கது.

நாடு, மதம், என்பவற்றைக் கடந்து தமிழர் என்பதனால் ஒன்றுகூடி எமது பாரம்பரியங்களை, கலைகளை, திறமைகளை, ஒற்றுமையை தாஸ்மேனிய சமூகத்திற்குப் பெருமையுடன் வெளிக்காட்டுவதற்கும், எம்மத்தியில் இருக்கும் திறமைமைகளை ஊக்குவிப்பதற்கும், எமது அடுத்த சந்ததிக்கு தமிழ் மரபுக்களைக் கற்றுக்கொடுப்பதற்கும் இங்குள்ள எமது சமூகத்தினை ஒன்றிணைப்பதற்கும் உரிய ஒரு விழாவாகவே தைப்பொங்கல் விளங்குகின்றது.

நாடகங்கள், பரதநாட்டியங்கள், கிராமிய நடனங்கள், கர்நாடக சங்கீதம், மெல்லிசை, பறையிசை, சிலம்பம், கோலமிடுதல் எனப் பலவாறான தமிழர் கலைகள் மட்டுமல்லாது இங்கு வாழும் பல்கலாச்சார சமூகங்களினதும் கலைகளையும் உழவர் திருநாள் என்பதாய் ஒன்றிணைத்து கொண்டாடும் இவ்விழாவானது அனைத்து சமூகங்களுக்கும் ஒரு முன்னுதாரணமாய் விளங்கின்றது. உழவுத் தொழிலிற்குப் பிரபலமான தாஸ்மேனியா மாநிலத்திலே தமிழ் உறவுகள், தமிழின் நட்புகள் முட்டுமல்லாது, தாஸ்மேனிய அரசியல் பிரமுகர்கள், பல்கலாச்சார சமூகங்களின் பிரதிநிதிகள், தாஸ்மேனியாவாசிகள் என அனைவருக்கும் உழவர் திருநாள் ஏற்புடையதாயிருப்பது இயல்பே.

தாஸ்மேனியத் தமிழ்ச் சங்க ஆர்வலர்கள், ஹோபார்ட் தமிழ் மொழி கலாச்சாரப் பாடசாலை சமூகம், இங்குள்ள பாரம்பரிய இசை மற்றும் நடனப்பள்ளிகள், சமையல் வல்லுநர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து கண்களிற்கும், செவிகளிற்கும், வயிற்றிற்கும் தைப்பொங்கல் விழாவில் கொடுக்கும் விருந்து எமது சிறிய தமிழ்ச் சமூகத்தின் அடையாளமானத்தில் ஆச்சரியமில்லை.

**விஜய் விஜயாலயன்**

# தமிழ் மரபு மாதம் - நமக்கான தேவை



தொன்மையான நாகரிகத்தைக் கொண்ட தமிழ்ச் சமூகமானது கணக்கிலடங்கா கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளை தன்னகத்தே கொண்டிருக்கிறது. எம் சமூகம் இழந்த, இழந்து கொண்டிருக்கின்ற இக்கூறுகளை மீண்டும் பெற உலகத் தமிழ் சமூகம் முனைந்து நிற்கின்றது. இந்தச் சூழ்நிலையில் ஆஸ்திரேலியா தமிழ்ச் சமூகம் தனது செயல்பாட்டை கூர்மைப்படுத்தி உலகளாவிய முயற்சிக்கு கைகொடுக்க வெண்டும்.

நாம் வாழும் இந்த பல்லின பொதுச்சமூகத்தில், மிகச் சிறப்பாக தங்களது கலை மற்றும் பண்பாட்டு விழுமியங்களை மொழியோடு வளர்த்து வாழ்ந்து கொண்டிருக்கும் முன்மாதிரியான பல சமூகங்கள் உள்ளன. ஆனால் எமது சமூகம் அப்படியான ஒரு நிலையில் இல்லை. நான் ஒரு தமிழன், எனது தாய்மொழி தமிழ், நான் தமிழ் மரபு கொண்ட ஒரு ஆஸ்திரேலியா குடிமகன் என்று தயக்கமின்றி பெருமிதத்துடன் சொல்லும் நிலையில் எம் இரண்டாம் தலைமுறை இல்லை. அத்தகைய நிலைக்கு எம் சமூகத்தை மாற்ற நாம் இணைந்து செயல்பட வேண்டும்.

தமிழ் மரபுரிமை - நமக்கும், நம் தலைமுறைக்கும் தனித்துவ அடையாளம்.

தை மாதம் - தமிழர் மரபுரிமை திங்கள் ஃதமிழ் மரபு மாதம் ஆகும். ஆம், தை மாதம் என்பது இயல்பாகவே பலதரப்பட்ட எழுச்சி உணர்வுகளையும் பலவித கொண்டாட்டங்களின் தொகுப்பையும் கொண்ட மாதம். தை மாதம் நமக்காக நம் சமூகத்தின் மொத்த அடையாளத்தையும் (நாம் இழந்தவற்றையும் சேர்த்து) பலவித தனித்துவமிக்க கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளையும் நமக்காக சேமித்து வைத்திருக்கின்றது.

ஆகவே இத்தகைய சிறப்பு வாய்ந்த தை - மாதத்தை பொங்கல் விழாவோடு ஒரு சம்பிரதாய கொண்டாட்டமாக மட்டும் கொண்டாடி சுருக்கி விடாமல், இம்மாதம் தொடக்கம் முதல் இறுதி வரை நம் முன்னோர்கள் நமக்கு கொடுத்த கொடைகளான தோற்கருவி இசைகள், ஆட்டக்கலைகள் மற்றும் தற்காப்பு கலைகளை கொண்டு மரபுக்கலை திருவிழாவாகவும் இயற்கை கொண்டாட்டம், உழவர் பெருநாள், அறுவடை திருநாள், உணவு பகிர்தல் என அனைத்து நம் மரபு சார்ந்த பண்பாட்டு பெரு விழாவாகவும், சல்லிக்கட்டு, மாட்டுப்பொங்கல், கானம் பொங்கல் எனவும் இலக்கியம்,கவிதை,வரலாற்று என இயற்தமிழ் விழாவாகவும்,பாரிய அளவில் விரிவுபடுத்தி தமிழ் மரபு திருவிழாவாக கொண்டாட வேண்டும்.

தை மாதம் என்பது "தமிழர் எம் மரபு மாதம்" என்பதை நம் சமூக மக்கள் உணர்ந்து அவர் தம் குழந்தைகளுக்கு உணர்த்தி புதுசு சமூகத்துக்கு நம் அடையாளமாக கொண்டு சேர்க்க வேண்டும்.அப்போதுதான் நாம் நம் சுய அடையாளத்துடன் இந்த பல்லின சமூகத்தில் தனித்துவததுடன் உரிமையுடன் வாழ முடியும்.

தை மாதம் என்பது எங்கள் "தமிழர் மரபு மாதம்" என்பதை நாம் சமூகமாக உணரத் தொடங்கினால் மட்டுமே "தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற பழந்தமிழர் கூற்று உண்மையாகும் மேலும் அவ்வழியே மீதமிருக்கும் 11 மாதங்களும் நம்மை செம்மையாக வழிநடத்தும்.

வாருங்கள் தமிழால் ஒன்றுபட்டு பல்லின பண்பாட்டு சமூகத்தில் தமிழ் மரபு மாதம் ஊடாக அங்கீகாரம் பெறுவோம்.

**ப.இலாரன்சு அண்ணாத்துரை**

# தமிழ் மரபுத் திங்கள் - தை!



தமிழரின் முதற்காப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் ஞாயிறையும் மாமழையையும் போற்றுகின்றார். இலக்கியங்கள் மக்கள் வாழ்வைக் காட்டும் கண்ணாடிகள். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழினம் இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்த மரபைக் கொண்டது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழர்களின் ஆழமான நம்பிக்கை.

தை மாதம் தமிழர் வாழ்வியலில் மிகவும் முக்கியமான மாதமாகும். கதிரவனின் கதிர்க் கரங்களால் நெற்கதிர்கள் பொலிந்து அறுவடை செய்யும் மாதம். தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கும் மாதம். உழவர்கள் உளம் மகிழ்ந்து தைப்பொங்கலைக் கொண்டாடி இயற்கைக்கும் விலங்குகளுக்கும் நன்றி கூறும் மாதம். உறவுகள் கூடிப் பகிர்ந்து உண்டு களிக்கும் மாதம். தமிழர் கலைகளும் பாரம்பரிய விளையாட்டுகளும் களைகட்டும் மாதம்.

தமிழரின் கடவுளாகப் போற்றி வழிபடப்படும் முருகனிற்கு தைப்பூச விழா ஆலயங்கள் தோறும் கொண்டாடப்படுகிறது. சோழமன்னன் தைப்பூசத்தையொட்டி ஆலயத்தில் கூத்துக்கள் நடாத்தியதாக கல்வெட்டு கூறுகின்றது. மொத்தத்தில் தமிழர்களின் உயரிய பண்பாட்டையும் கலாசாரத்தையும் கலைகளையும் வழிபாட்டு முறைகளையும் போற்றும் மாதமாகத் தைத் திங்கள் திகழ்கிறது.

இத்தகு சிறப்புமிக்க தை மாதத்தை நியூ சவுத் வேல்ஸ் வாழ் தமிழர்கள் பல வருடங்களாகக் கொண்டாடி வருகின்றனர். இவர்களே அவுஸ்திரேலியாவின் முதலாவது திறந்தவெளிப் பொங்கல் விழாவை 2012ஆம் ஆண்டு கொண்டாடிய பெருமையை உடையவர்கள்.

மாநிலத்தின் பல பகுதிகளிலும் தற்போது பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ் விழாக்களில் தமிழர் கலைகளும் பாரம்பரிய விளையாட்டுகளும் முக்கியம் பெறுகின்றன. நீண்ட கோடை கால விடுமுறை என்பதால் எமது இளம் சந்ததியினர் இவ்விழாக்களில் அதிக பங்களிப்பை நல்குகிறார்கள். தமது பாரம்பரியத்தைத் தெரிந்துகொள்கிறார்கள். சிட்னியிலுள்ள மாநிலத்தின் பாராளுமன்றத்திலும் கன்பராவிலுள்ள அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்திலும் பொங்கல் விழாவினை நியூ சவுத் வேல்ஸ் தமிழர்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். தை மாதத்தின் இறுதியில் இனத்தின் விடிவுக்காக இன்னுயிரை அர்ப்பணித்த மாவீரனை நினைவு கூர்ந்து பெரிய அளவில் விளையாட்டுப் போட்டி ஒன்று நடைபெற்று வருகின்றது. இதில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்து ஆலயங்களில் தைப் பொங்கல் தினத்திலும் தைப்பூசத் தினத்திலும் சிறப்பு வழிபாடுகள் இடம் பெறுகின்றன.

எமது எதிர் காலச் சந்ததிக்கு எமது பண்பாட்டையும், கலாசாரத்தையும், கலைகளையும், விழுமியங்களையும், பாரம்பரிய விளையாட்டுகளையும் கற்றுக் கொடுக்கவும் கையளிக்கவும் எமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் தைத் திங்கள் ஆகும். இதை உணர்ந்து தமிழர் மரபுத் திங்களை நன்கு திட்டமிட்டு அவுஸ்திரேலியத் தமிழர்கள் ஒன்றிணைந்து கொண்டாட வேண்டியது எமது வரலாற்றுக் கடமையாகும்.

தமிழ் வாழ நாம் வாழ்வோம்! நாம் வாழத் தமிழ் வாழும்!!

**கதிர்காமநாதன், நரேந்திரநாதன்**

# பெர்த் - மேற்கு ஆஸ்திரேலியா



உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்.

வள்ளுவன் காலம் தொட்டு உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்தது நம் பைந்தமிழ் குடி. பழையன கழித்து புதியன புணைந்து பாரம்பரியம் காத்து புகுவிழா புகும் நாளான "தை" த் திருநாளின் பெருமைகள் இதோ.

இயற்கையோடு இயைந்து வாழக் கற்று கொடுத்த சமூகம் நாம் இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு இயற்கையை இறைவனாய் பாவித்து அதற்கு நன்றியும் பெருமையும் சேர்க்க கொண்டாடும் திருவிழா தான் "தை"த்திருநாள்.

ஆடிப்பட்டம் தேடி விதைத்த பயிர்களினை பக்குவமாய் அறுவடை செய்து பயனடையும் பருவமாம் "தை"த் திருநாளில் புத்தரிசியை பால் நெய் சர்க்கரையிட்டு புதுப்பானை பொங்கலிட்டு கதிர்களுக்கு உயிர் கொடுத்த கதிரவனுக்கு காணிக்கை யாக்கும் நாளே முதல்நாள்.

முப்போக விளைச்சலுக்கு முதுகெலும்பாய் திகழ்ந்த வீட்டு விலங்குகட்கு விழா எடுக்கும் இரண்டாம் நாளூம் சொந்த பந்தம் உற்றார் உறவினர்களை ஒன்றாக்கி புத்தரிசி சாதமிட்டு உற்ற உறவுகளை காணும் பொங்கலாக மூன்றாம் நாளும்.

முக்காலத்தையும் ஈரடியில் அகிலத்திற்கு உணர்த்திய வள்ளுவனுக்கு திருவள்ளுவர் தினமாக விழாக்கண்டனர் நம் முன்னோர்கள். நித்தம் மாறிவரும் நாகரீகத்திலும் மாறாத நாகரீகமாய் அகிலத்தை வலம் வரும் தமிழர் பாரம்பரியம் போற்றி காக்க போர் வாலென புறப்படு எம் உலக தமிழ் சமூகமே.

இந்த மகத்தான நாளை மேற்கு ஆஸ்திரேலியாவில் வாழும் அனைத்து தமிழ் அமைப்புகள் மற்றும் அமைப்பு சாரா அனைத்து தமிழர்களும் ஒன்றினைந்து ஒவ்வொரு ஆண்டும் இந்த "தை"த் திருநாளை கொண்டாடுவதில் இங்கு வசிக்கும் அனைத்து தமிழர்களும் பெருமையடைகிறோம். மேலும் இதன் முலம் நமது கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் மற்றவர்களும் கொண்டு செல்லும் இந்த நேரத்தில் அடுத்த கட்டமாக "தை"த் திருநாள் கொண்டாடும் இந்த தை மாதத்தினை தமிழ் மரபுத் திங்களாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் ஆஸ்திரேலிய அரசாங்கங்களிடம் வைக்கின்றோம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

**பாஸ்கர் சத்தியமூர்த்தி**

# அடையாளம்



பல்லாயிரம் வருடங்களாக, தலைமுறை தலமுறையாகக் கையளிக்கப்பட்டுவந்த செழுமை மிக்க, அறம் நிறைந்த அரிய கொடையான நம் பாரம்பரியம், பாதுகாக்கவும் பறைசாற்றவும் வேண்டியதொன்றாகும்.

புலம் பெயர்ந்த, பெயர்க்கப்பட்ட ஒரே காரணத்தால் நம் மொழியும், பண்பாடும் புலம்பெயர் சந்ததிகளுக்குக் கடத்தப் படாமல் போவதை நம் இனத்தின் சாபக்கேடெனலாம். அதிலிருந்து மீண்டு, எதிர்காலத் தலைமுறைகளுக்கு அவற்றை எடுத்துச் செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு, தமிழுணர்வுள்ள நம் அனைவரதும் கடமையாகும்.

எங்கும் காணாத இலக்கியச் செழுமை, இயற்கை யுடனான வாழ்க்கைமுறை, அழகியல் கலைகள், வியத் தகு சிற்ப, கட்டிடக் கலைகள், உணவே மருந்தாகும் சித்த வைத்தியம், வர்மம்,களரி போன்ற தற்காப்பு கலைகள், பறையிசை,நாட்டார் பாடல்கள்,நடனங்கள் எனப் பன்முகம் கொண்ட ஒரு பாரம்பரியம் அழியாமல்,சிதையாமல் காக்கப் படவேண்டும்.

அகழ ,அகழக் கீழடியில் கிடைக்கும் அற்புதங்கள் நம்மை பெருமிதப் படுத்தினாலும், பாதுகாக்கப் படாவிட்டால், எஞ்சியிருக்கும் அடையாளமும் அழிந்தொழிந்து, காலடியில் கீழடியைப்போல் மறைந்துவிடும் எனும் நிதர்சனத்தையும் நமக்கு உணர்த்துகின்றன.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் நம் மொழியை, தமிழினத்தின் உயிரான தமிழ் மொழியை,அதன் விழுமியத்தை புத்துயிர்க்கும் செயற்பாடுகளில் நாம் உடனடியாக ஈடுபட வேண்டும். ஒரு குறிப்பிட்ட மாதத்தை அதற்குரியதாக வைத்துக் கொள்வது அம்முயற்சியில் குறிப்பிடத்தக்க நேர் மறை விளைவுகளை ஏற்படுத்தும். நம் இளையவர்களையும்,மற்றைய பல்லினத்து மக்களையும் நம் பால் இழுக்கும்,ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

எங்கள் குயீன்ஸ்லாந்து மாநிலத்தில், இயற்கையையும், உழவர்களையும் போற்றும் பெருவிழாவான தைப்பொங்கல் விழா ஆண்டுதோறும் தை மாதத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அத்தோடு தமிழ் பள்ளிகள், கலைக் கூடங்கள், மற்றும் பல்வேறு மன்றங் கள், கூட்டமைப்புகள் மூலம் தமிழ் விழாக்களும், இலக்கிய நிகழ்வுகளும் பரவலாக நடைபெற்று வருகின்றன. முக்கியமாக, பொதுப்பள்ளிகளில் தமிழையும் ஒரு பாடமாகக் கொண்டு வரும் பெரு முயற்சியும் மும்முரமாக நடந்து வருகின்றது.

தமிழர் தம் மரபுத் திங்களாய் தை மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டால், மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளும் மேலும் சிறப்பாக நடைபெற்று ஆஸ்திரேலியத் தமிழர் எனும் நம் அடையாளத்தைத் தக்கவைக்கும்.தை பிறந்தால் வழிபிறக்கும் என்று நம் முன்னோர் வெறுமனே சொல்லிச் செல்லவில்லை. தைமாதம் தமிழர்தம் வாழ்வில் தனிப்பெருமை கொண்டதாகத் திகழ்வதை நாம் அனைவரும் அறிவோம்.

நம் பாரம்பரீயத்தைப் பாதுகாப்போம், பறை சாற்றுவோம்.

**வாசுகி சித்திரசேனன்**

# பொங்கல் விழா - உலக விவசாயத் திருநாள்



மனிதர்களின் வாழ்வில் விழாக்களின் முக்கியத்துவம் என்பது வார்த்தையில் அடக்க முடியாத அளவிற்கு முக்கியமானதாகும். இந்தவகையில்தமிழர்கள்வருடத்திற்கு ஏறக்குறைய 20 இற்கும் மேற்பட்ட விழாக்களைக் கொண்டாடுகிறார்கள். அதில் முக்கியமானதாக விளங்குவது பொங்கல் ஆகும்

இயற்கையைக் கொண்டாடுவதை, விவசாயத்தை கொண்டாடுவதை, சூரியனுக்கு நன்றி தெரிவிப்பதை ஓர் அங்கீகரிக்கப்பட்ட விழாவாக பல நூற்றாண்டுகளாகக் கொண்டாடிவரும் தமிழர்களுக்கு தை மாதம் என்பது மிக முக்கியமானதாகும்.

அதை முதலில் தமிழர் தமது பாரம்பரிய விழாவாகவும் பின்னர் அதையே உலக விவசாயத் திருநாளாகவும் கொண்டாடுவதற்கு தமிழர்கள் ஒவ்வொருவரும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இதை முதலில் தமிழ்ச் சமூகமாக நாம் ஆஸ்திரேலியா முழுதும் எடுத்துச் செல்ல வேண்டும். ஆஸ்திரேலியா முழுதும் விவசாயத் திருநாள் என்பது தைத்திருநாள் எனக் கொண்டு வர வேண்டும்.

அதற்கான முயற்சிகள் அனைத்தையும் சிறுகச் சிறுக நாம் சார்ந்த கவுன்சிலில் இருந்தும், பின்னர் மாநிலத்திலிருந்தும் நடத்த வேண்டும். தற்போதைக்கு ஆஸ்திரேலியா முழுதும் தை மாதத்தின் போது ஏறக்குறைய 40 இடங்களில் பல்வேறு இடங்களில் பொங்கல் விழாக்களை நாம் நடத்துகிறோம். இதை ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியாக ஆஸ்திரேலியா முழுதும் எடுத்துச் சென்று சேர்க்க வேண்டும். இதன் மூலம் கிடைக்கும் பலன்கள் ஒட்டுமொத்த மனிதச் சமூகத்துக்கும் சென்று சேர ஒரு குழுவாக சேர்ந்து நாம் செயல்படுவோம்.

பொங்கல்விழாவை தமிழர்கள் 21ம் நூற்றாண்டில் உலகத்திற்கு கொடுக்கும் கொடையாக இருக்க வேண்டும்.

**பொன்ராஜ் தங்கமணி**

# தமிழ் மரபுத் திங்கள்



விக்டோரியா மாநிலத்தில் வாழும் 27, 000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் மாநிலத்தின் பொருளாதாரம் மற்றும் ஆஸ்திரேலியாவின் முன்னேற்றத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்குவதை அங்கீகரிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரியில் மரபுத் திங்கள் மாதம் அறிவிக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்படும். இத்தகைய ஒரு மாதத்தின் பலன் விழிப்புணர்வு, புரிதல் மற்றும் நமது செழுமையான தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பரந்த ஆஸ்திரேலிய சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் மாநிலத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பைக் கொண்டாடுவதற்கான வாய்ப்பை வழங்கு கிறது

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக ஜனவரி மாதத்தில் விக்டோரியா மாநிலம் முழுவதும் பல கலாச்சார நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் தமிழர்கள் ஒன்றிணைந்து தங்கள் புகழ் பெற்ற பாரம்பரியங்களை கொண்டாடி வருகின்றனர். வரும் ஜனவரியிலும் பிரமாண்டமாக கொண்டாடப்பட உள்ளது.

தமிழில், பொங்கல் என்ற வார்த்தைக்கு "நிரம்பி வழிவது" என்று பொருள், இது மிகுதியையும் செழிப்பையும் குறிக்கிறது. மேலும் தை மாதத்தின் ஆரம்பம் புதிய வாய்ப்புகளுக்கு வழி வகுக்கும் என நம்பப்படுகிறது. கனடாவில் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் மிகவும் வெற்றிகரமான தமிழ் மரபுத் திங்களாக நடத்தப்படுகிறது. இங்கிலாந்திலும் இது பரிசீலனையில் உள்ளது.

**ஜெய் நாடார்**



# வடக்கிலிருந்து வெளியேறியது சீனா கால்பதிக்க தயாராகிறது டில்லி

இலங்கை மற்றும் சீனாவுக்கிடையிலான நெருக்கமான - இறுக்கமான அரசியல் - பொருளாதார - இராஜதந்திர உறவில் தற்போது விரிசல் ஏற்பட்டுள்ளது. கடும் சீற்றத்தில் உள்ள பீஜிங்கை குளிரவைப்பதற்கான நகர்வுகளை கொழும்பு முன்னெடுத்தாலும் அது இன்னும் கைகூடவில்லை. முயற்சிகள் தொடர்கின்றன.

உரத்தால் ஆரம்பமான பிரச்சினை, முதலீட்டு உறவுகளை முறித்துக்கொள்ளும் அளவுக்கு இன்று உக்கிரமடைந்துள்ளது.

பண்டைய காலம் தொட்டே இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் வர்த்தகம் உட்பட ஏனைய விடயங்களிலும் சிறந்த நல்லுறவு இருந்துவருகின்றது. போர் காலத்திலும், அதன் பின்னரும் கொழும்புக்கு பீஜிங் எல்லா வழிகளிலும் நேசக்கரம் நீட்டியது.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடன்களையும், நன்கொடைகளையும் வாரி வழங்கியது. அது மட்டுமல்ல ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐ.நா. பாதுகாப்பு சபை ஆகியவற்றில் இலங்கைக்கு பக்கபலமாக இருந்ததும் சீனாதான். இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படும் பிரேரணைகளை மழுங்கடிக்க செய்வதற்கும் சீனாவே தலைமை தாங்கும்.

இதனால் ராஜபக்ச அரசு சீனாவை முழுமையாக நம்பியது. இதனை பயன்படுத்தி இலங்கையில் சீனா ஆழமாக காலூன்றியது. மெல்லென கடல் வலையையும் விரித்து - விஸ்தரித்துக்கொண்டது. இதனால் ராஜபக்ச அரசுமீது டில்லி கடும் அதிருப்தியில் இருந்தது. எனவே, சீனாவுக்கு ஒரு திட்டத்தை வழங்கினால் மற்றுமொரு திட்டத்தை டில்லிக்கு வழங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

மஹிந்த ஆட்சி கவிழ்ந்த பின்னர் நல்லாட்சி அரசு துறைமுக நகர் திட்டத்தை இடைநிறுத்தினாலும் பின்னர் அதனை ஆரம்பித்தது. அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் சீனாவுக்கு வழங்கியது. அந்தளவுக்கு சீன அழுத்தம் - ஆதிக்கம் காணப்பட்டது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியதால், மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர். சீனாவும் தனது மகிழ்ச்சியை வெளியிட்டது.

ஆனால் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சேதன பசளை தரமற்றது, தீங்கு விளைவிக்ககூடிய பற்றீரியாக்கள் இருப்பதால் அவற்றை இலங்கையில் இறக்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இலங்கை அரச நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையை சீன நிறுவனம் ஏற்க மறுத்தது. சர்வதேச மத்தியஸ்தத்தையும் கோரியது. அதனை இலங்கை ஏற்க மறுத்தது.

எனினும், சீன நிறுவனத்தின் கப்பல் இலங்கை கடல் எல்லைக்குள்தான் நீண்டகாலம் சுற்றிதிரிந்த பிறகே வெளியேறியது.

இந்நிலையில் இலங்கை மக்கள் வங்கியை கறுப்பு பட்டியலில் இணைத்து சீன தூதரகம் பதிலடி கொடுத்தது. இதற்கு வெளிவிவகார அமைச்சு ஆட்சேபனையை வெளியிட்டிருந்தாலும், சீன தூதுவரை அழைத்து விளக்கம் கோரவில்லை. மாறாக சீனத் தூதரகத்துக்கு சென்று விவசாயத்துறை இராஜாங்க அமைச்சருக்கு விளக்கமளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது இராஜதந்திர மட்டத்தில் இலங்கைக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவாகும்.

இலங்கையின் அரச வங்கியை கறுப்பு பட்டியலில் இணைத்ததும், கப்பலை திருப்பி கொண்டு செல்ல மறுப்பதும் சீனாவின் ஆதிக்கத்தை வெளிப்படுத்துவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதுமட்டுமல்ல மற்றுமொரு பதிலடியையும் சீனா கொடுத்துள்ளது. வடக்கில் மூன்று தீவுகளில் முன்னெடுக்கவிருந்த மின்னுற்பத்தி திட்டங்களை இடைநிறுத்துவதற்கு சீனா தீர்மானித்துள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்தியா சென்றுள்ள நிலையில் சீனா இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்துள்ளமை குறித்தும் அதிருப்திகள் வெளியாகியுள்ளன.

மூன்றாவது தரப்பொன்று பாதுகாப்பு தொடர்பில் முன்வைத்த விடயங்கள் காரணமாக Sino Soar Hybrid Technology சீன நிறுவனம் இந்த செயற்றிட்டத்தை இடைநிறுத்தியதாக இலங்கைக்கான சீன தூதரகத்தின் ட்விட்டர் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மூன்று செயற்றிட்டங்களையும் கைவிட்ட சீன நிறுவனம் மாலைதீவுகளிலுள்ள 12 தீவுகளில் சூரிய சக்தி மின்னுற்பத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த அந்நாட்டு அரசாங்கத்துடன் கடந்த 29 ஆம் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கிலுள்ள நெடுந்தீவு, அனலை தீவு மற்றும் நயினா தீவில் மின்னுற்பத்தி செயற்றிட்டத்தை ஆரம்பிக்க சீன நிறுவனம் தயாராகியிருந்தது.

இலங்கை மீதான அதிருப்தியை வெளியிடும் விதத்திலேயே சீனா இந்த முடிவை எடுத்திருக்கலாம் என இராஜதந்திர மட்டத்தில் அச்சம் வெளியிடப்படுகின்றது.

சர்வதேச மட்டத்தில் சீனாவின் உதவி இலங்கைக்கு அவசியம் என்பதால் அந்நாட்டை அனுசரித்து செல்லவே இலங்கை முற்படும்.

அதேவேளை வடக்கில் அபிவிருத்தி திட்டங்களுக்கு முதலீடுகளை மேற்கொண்டு டில்லி அங்கு ஆழமாக காலூன்ற வேண்டும் என பல தரப்பினரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆர்.சனத்

# குகைக்குள் முடங்கி ஓய்வுக்கு தயாராகிறது "சிவப்பு சால்வை" சிங்கம்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான கூட்டணி அரசுக்கு, நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இருந்தாலும், அரச கட்டமைப்பு என்பது ஆட்டம் காணும் நிலையிலேயே உள்ளது. மறுபுறத்தில் அரச கூட்டணிக்குள் பிரச்சினைகளும் தலைவிரித்தாடுகின்றன. இதனால்தான் விடுக்கப்பட்ட வர்த்தமானிகளை அடிக்கடி வாபஸ்பெற வேண்டிய நிலைமையும் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

ஒரு புறத்தில் பொருளாதார நெருக்கடி மறுபுறத்தில் அரசியல் நெருக்கடி என கோட்டா அரசுக்கு 'தலையிடிகளே' தொடர்கின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்தில் இலங்கை அரசியல் வரலாற்றிலே மிக முக்கிய புள்ளிகளுள் ஒருவராகக் கருதப்படுகின்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ச, செயற்பாட்டு அரசியலுக்கு விரைவில் விடைகொடுக்கவுள்ளார் என்ற தகவல் மீண்டும் அரசியல் களத்தில் உலாவ ஆரம்பித்துள்ளது.

இற்றைக்கு சில மாதங்களுக்கு முன்னர் இதேபோன்றதொரு தகவல் வெளியாகியிருந்தாலும் பிரதமருக்கு நெருக்கமான வட்டாரங்கள் அதனை நிராகரித்தன. எனினும், இம்முறை இன்னும் மறுப்பறிக்கை எதுவும் வெளியாகாததால், இந்தத் தகவல் உண்மையாக இருக்கக்கூடும் எனவும் அரசியல் களத்தில் பேசப்படுகின்றது.

உடல் நலத்தைக் கருத்திற்கொண்டே மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியை துறப்பார் எனக் கூறப்பட்டாலும், அதற்கான உண்மையான காரணம் இன்னும் உறுதியாக - உத்தியோகப்பூர்வமாக வெளியாகவில்லை. ஆனால் மஹிந்த முதுமை நிலையை அடைந்துள்ளதும், அவரால் முன்னர்போல் செயற்படமுடியாமல் இருப்பதையும் அவர் பங்கேற்கும் நிகழ்வுகளில் நடந்துகொள்ளும் விதத்திலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

1970 இல் நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்த மஹிந்த ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியென அத்தனை உயர் பதவிகளையும் அரசியலில் வகித்துள்ளார்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் நிறைவுக்குவரும் தறுவாயில் இவரே ஜனாதிபதியாக செயற்பட்டதால் சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் இவருக்கான செல்வாக்கு கோலோச்சியது. மீட்பாராகவே அவரை கருதியதுடன், ஒரு சிலர் கடவுள் எனவும் போற்றி புகழ்ந்தனர். அடுத்த துட்டகை முனு மன்னன் எனவும் மகுடம் சூடினர்.

இதனால்தான் 2015 இல் மண்கவ்வியிருந்தாலும் குறுகிய காலப்பகுதிக்குள் மீண்டும் ஆட்சியை பிடிப்பதற்கு அவரால் தலைமைத்துவம் வழங்கக்கூடியதாக இருந்தது. 2020 பொதுத்தேர்தலில் குருணாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட அவர் இலங்கை தேர்தல் வரலாற்றில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர் என்ற சாதனையையும் படைத்தார்.



தற்போதைய அரசில் சர்வபலம் பொருந்திய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ச திகழ்ந்தாலும் முக்கியமான முடிவுகள் பிரதமர் மஹிந்தவின் அனுமதியின்றி எடுக்கப்படுவதில்லை. மஹிந்தவின் ஆலோசனையின்றி எவுதும் நடப்பதும் இல்லை என்பதே உண்மை. வீட்டு உரிமையாளர் கோட்டா என்றபோதிலும் சாவிக்கொத்து என்பது மஹிந்தவிடமே உள்ளது.

அரசுக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக்கட்சிகள்கூட, அரசின் பயணம் தொடர்பில் கடும் அதிருப்தியில் உள்ளன. அக்கட்சிகளை மஹிந்த கட்டுப்படுத்தி வைத்துள்ளார். இது விடயத்தில் மஹிந்த தலையிட்டிருக்காவிட்டால் இந்நேரம் அரச கூட்டணி உடைந்திருக்கும். மஹிந்த செயற்பாட்டு அரசியலில் இருக்கும்வரைதான் கூட்டணி ஒற்றுமையும் நீடிக்கும்.

எனவே, தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் மஹிந்த ராஜபக்ச பதவி துறக்கும் முடிவை உடனடியாக எடுக்கமாட்டார் எனவும், தீவிர செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கி, முக்கிய நிகழ்வுகளில் மட்டுமே பங்கேற்பார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய சூழ்நிலையில் அரசுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் முழுமையாக செல்வாக்கு குறைந்துள்ளது. இந்நிலையில் மஹிந்தவும் விடைபெற்றால் அது பாதிப்பாக அமைந்துவிடும். எனவே, ஆட்சியை காக்கவும், அடுத்த தேர்தலுக்கு களம் அமைக்கவும் மஹிந்தவின் வகிபாகம் அரசுக்கு கட்டாயம் தேவைப்படுகின்றது.

சிலவேளை அவர் பிரதமர் பதவியை துறந்தால்கூட மஹிந்தவுக்காக உயர் பதவியொன்று உருவாக்கப்படும் எனவும், அது கௌரவநிலை பதவியாக அமையும் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ச ஒதுங்கினால்கூட ராஜபக்ச குடும்பத்தை சேர்ந்த ஒருவருக்கே அப்பதவி வழங்கப்படக்கூடும். சமல் ராஜபக்ச, பஸில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோர் அந்த பட்டியலில் முன்னிலையில் உள்ளனர்.









# மல்லிகை ஜீவா நினைவரங்கில் முருகபூபதியின் 3 நூல்கள் வெளியீடு

இலங்கையின் மூத்த எழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான டொமினிக் ஜீவாவால் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்தாளரும் சமூகப் பணியாளருமான முருகபூபதியின் 70 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் ‘கதைத் தொகுப்பின் கதை’ (சிறுகதை), ‘நடந்தாய் வாழி களனி கங்கை’ (கட்டுரை) ‘பாட்டி சொன்ன கதைகள்’, (சிறுவர் இலக்கியம்) ஆகிய நூல்களின் வெளியீட்டு அரங்கு இம்மாதம் 19 ஆம் திகதி ( 19-12-2021 ) ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு மெல்பெர்ணில் Berwick senior citizens hall (112 High Street, Berwick VIC 3806) ) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் பெருந்தொற்றினால் மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், மல்லிகை இதழின் ஆசிரியருமான டொமினிக் ஜீவாவின் உருவப்படத்திற்கு விளக்கேற்றி, அவரைப் பற்றிய நினைவுரை நிகழ்த்தப்படும்.

அதன்பின்னர் சட்டத்தரணி செல்வத்துரை ரவீந்திரன், முருகபூபதியின் நூல்களை வெளியிட்டு வைப்பார்.

கொழும்பு இலக்கியன் வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்ட பாட்டி சொன்ன கதைகள் (சிறுவர் இலக்கியம்) நூல் குறித்து செல்வன் ஹரீஜன் பசுபதி தாசனும் யாழ். ஜீவநதி வெளியீடாக வந்துள்ள கதைத் தொகுப்பின் கதை நூல் குறித்து திருமதி கலாதேவி பால சண்முகன், அசோக்குமார் ஜனார்த்தனன், க. ராஜா ஆகியோரும், கொழும்பு குமரன் பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள நடந்தாய் வாழி களனி கங்கை நூல் குறித்து திரு. கிறிஸ்டி நல்லரத்தினமும் உரையாற்றுவர்.

நடந்தாய் வாழி களனி கங்கை (கட்டுரை) இலங்கையின் வற்றாத ஜீவநதி களனி கங்கங்கை தீரத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகள், மற்றும் ஐதீகக் கதைகளின் பின்னணியில் அங்கு ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் பற்றிய விவரணச் சித்திரமாக படைக்கப்பட்ட நூல்.

களனி நதியின் கரையோரம் எங்கும் நடந்த சுவாரசியமான கதைகளைக்கூறும் இந் நூல். கதைத் தொகுப்பின் கதை (சிறுகதை )

கதைத் தொகுப்பின் கதை, புகலிட வாழ்வுக்கோலங்களை சித்திரிக்கும் -15 சிறுகதைக்களைக் கொண்டிருக்கிறது. இது முருகபூபதியின் ஏழாவது சிறுகதைத் தொகுதியாகும்.

### பாட்டி சொன்ன கதைகள்

முருகபூபதியின சின்னஞ்சிறிய வயதில் அவரது பாட்டி அவரை உறங்க வைக்கும் பொழுது சொன்ன (Bed time stories) கதைகளை உருவகக் கதைகளாக மாற்றி, இன்றைய நவீன காலத்திற்கு ஏற்ப எழுதப்பட்டது. சிறுவர்களுக்கு மாத்திரமின்றி பெரியவர்களுக்குமான படைப்பாக இருக்கிறது.

இந்த நூல் தமிழ் நாட்டில் வெளிவந்தமையால், அங்கு நூலகசேவைகள் திணைக்களம், சிறுவர் இலக்கிய வரிசையில் இதனைச் சேர்த்தது. பாட்டி சொன்ன கதைகள். தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட சில கதைள், சிறுவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் சிறுவர் கதைகள் என்ற பெயரில் வண்ணப் படங்களுடன் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

இதனை இலங்கை கல்வி அமைச்சு சிறுவர் இலக்கியவரிசையில் இணைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





IMMIGRATION LAW ACCREDITED SPECIALIST

PARISH PATIENCE IMMIGRATION LAWYERS (FOUNDED 1888)

ABN: 99 613 933 289

MIA Migration Institute of Australia

Our large legal team provides a full range of specialist immigration legal services no matter where you are in the world at competitive rates



Michael T Jones

Legal Practice Manager
Director
Accredited Specialist in Immigration Law
MARN: 9255530
Email: mtjones@ppilaw.com.au



ASHWINA KRISHNAN
Solicitor & Migration Agent
MARN: 1913008
Email:ashwinak@ppilaw.com.au



MAHALINGAM (SHAN) SUTHARSHAN

LL.B(Col), LL.M(Monash), LL.M(ANU
Director
Senior Registered Migration Agent
MARN: 0961664
Email: shan@ppilaw.com.au

Non - Immigration Matters
- Family law & Divorce Application
- Criminal Law
- Traffic Offences
- Commercial and Business Law

PARISH PATIENCE IMMIGRATION LAWYERS

133 YEARS

Our professional provide expert assisstance with:

- Business & Investment Visas SC188, 888, and 132
- Student SC500 and Student Dependent Visa
- SC485 (TR) and SC485 Dependent Visa
- General Skilled Migration (GSM) SC189, 190 and 489 Visa
- Skilled Assessment, SkillSelect, EOI
- State Sponsorship and Nomination
- ENS (SC186), RSMS (SC187) and TSS (SC482)
- Refugee & Asylum Seekers SC866
- Temporary Protection Visa SC785
- Safe Haven Enterprise Visa (SHEV) SC790
- Family, Partner, Child, Parent, and Carer Visa
- Visitor SC600 and Working Holiday Visa
- Distinguished Talent Visa
- Citizenship and Resident Return Visa
- Administrative Appeal Tribunal (AAT)
- Federal Circuit Court, Federal Court & High Court
- Visa Cancellation, Detention and Deportation
- Health, Character & Identity Issues (PIC4020)
- All other visas and Immigration matters
- Commercial and Property matters

Level 3, 83 York Street Sydney NSW 2000 | Tel: +61 02 9286 8700 | E: ppmail@ppilaw.com.au | W: www.parishpatience.com.au |FB: @PPBILaw


VIJITHA TEXTILES
விஜிதா புடவை மாளிகை
அனைத்து
வயதினருக்குமான
ஆடை
அணிகலன்களையும்
மலிவான விலையில்
நீங்கள் எம்மிடமிருந்து
எப்போதும்
பெற்றுக்கொள்ள
முடியும்
மலிவு விலை!!!
639 IPSWICH ROAD,
ANNERLEY QLD.
0470 295 383

# யார் துரோகி தியாகி



கருணாகரன்

சுமந்திரன் அணியின் மேற்குலக அரசியற் சுற்றுலா பற்றிய பேச்சே இப்பொழுது தமிழ்ப்பரப்பில் நிலவுகிறது. ஒரு தரப்பு ஆதரவாகப் பேசுகிறது. மறு தரப்பு அதை எதிர்த்து நிற்கிறது.

ஆதரவாக நிற்போர் - அமெரிக்கத் தலைமையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சாத்தியங்கள் உண்டென நம்புகிறார்கள். அதைச் சுமந்திரனோடு இணைந்து தாம் முன்னெடுப்பதாகவும் பெருமையடைகின்றனர்.

எதிர்த்து நிற்போர் - இது ஒரு பயனற்ற செயல். சுமந்திரனும் அவருடன் இணைந்து நிற்போரும் செய்கின்ற துரோகம் என்று நம்புகிறார்கள். இதனால் இந்தப் பேச்சுகளையும் சுமந்திரனுடைய அரசியற் சுற்றுப் பயணத்தையும் எதிர்க்கிறார்கள். குறிப்பாக கனடாவில் சுமந்திரனின் உரையைத் தடுத்திருக்கிறார்கள். சுமந்திரனை இடையீடு செய்து வெற்றியடைந்ததையிட்டுப் பெருமைப்படுகிறார்கள்.

இப்படி இரண்டு தரப்பும் ஏட்டிக்குப் போட்டியாக நிற்கின்றன. இதனால் இந்தப் பயணம் விவகாரமாகிச் சூடு பிடித்திருக்கிறது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று, “இந்தச் சுற்றுலா தமிழ் மக்களின் அரசியல் பயணத்திலும் அரசியல் எதிர்காலத்திலும் ஒன்றும் முக்கியமானதல்ல. இது சுமந்திரனின் எதிர்கால அரசியல் லாபத்துக்கான ஏற்பாடு. அவர் தமிழரசுக் கட்சியிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலும் தலைமைத்துவ நிலையைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டு வருகிறார். அதில் கணிசமான வெற்றியையும் பெற்றுள்ளார். இந்த ஏற்பாட்டின் ஒரு வடிவமே இதுவாகும்.

சுமந்திரன் இந்த இடத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் கட்சிக்குள்ளும் மக்களிடத்திலும் வெளியுலகிலும் மேலும் கணிசமான ஆதரவுத் தளம் தேவை. அதையே அவர் தொடர்ச்சியாகச் செய்து வருகிறார். இந்த வகையில்தான் இந்தப் பயணத்தையும் இந்தப் பேச்சுக்களையும் அவர் பயன்படுத்திக் கொள்கிறார். இதை இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டாக இணைந்தே மேற்கொள்கின்றன. இந்த இரண்டு நாடுகளுக்கும் சுமந்திரன் இன்று தேவை. சுமந்திரனுக்கும் இந்த வாய்ப்புகள் தேவை.

இந்தப் பேச்சுக்களை ஏற்பாடு செய்ததே இந்தியத் தரப்புகள்தான். இதைச் சுமந்திரனே தனிப்பட்ட உரையாடல்களின்போது வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் சுமந்திரனின் ஆதரவாளர்களாக உள்நாட்டில் இருப்போரும் வெளியுலகில் இருக்கும் புலம்பெயர் தமிழர்களும் இதைத் தமக்குரிய சாத்தியங்களின் வழியே செய்து வருகிறார்கள். அனுசரணையளிக்கிறார்கள். அவர்களுக்கும் இது தேவை. முக்கியமாகப் புலம்பெயர் நாடுகளில் இருக்கும் தமிழர்களில் ஒரு தரப்பினருக்கு ஒரு அரசியல் முகவரி தேவைப்படுகிறது. முன்பு புலிகள் இருந்தவரையில் அது சாத்தியமாகவில்லை. அப்பொழுது எதையும் புலிகளே தீர்மானிக்கும் நிலையில் இருந்ததால், புலிகளே பிரதான அடையாளமாக இருந்ததால் இவர்களுடைய தலைகளில் ஒளி வட்டம் சுழலமுடியாமல் போனது.

இப்பொழுது நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழர்களுக்கு யார் தலைமை தாங்குவது என்ற ஏகப்பட்ட போட்டிகள். இந்தப் போட்டியில் தமது மேலாதிக்கச் செல்வாக்கைப் பெற்றுள்ளவர்கள் (தொடர்பினாலும் பண பலத்தினாலும்) அடையாளத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர். இதை இந்தியாவும் அமெரிக்காவும் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. அப்படியான ஒன்றுதான் உலகத் தமிழர் பேரவையும் சக இணை அமைப்புகள் மற்றும் ஆதரவாளர்களும் இணைந்து மேற்கொண்ட அமெரிக்கப் பிரதிநிதிகள் சந்திப்பு, கனேடிய விஜயம்,

அமெரிக்காவில் இருக்கும் இந்தியத்தூதுவர், இந்தியாவின் ஐ.நா பிரதிநிதி போன்றோருடனான சந்திப்புகளும் பிரித்தானியப் பயணம் போன்றவையும்.

இதன் நோக்கம் இந்திய - மேற்குலகின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்றவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தயார்ப் படுத்துவதாகும். இந்த அடிப்படையில் தான் இந்தப் பயணமும் சந்திப்புகளும் நடந்து வருகின்றன என்பது ரகசியமானதல்ல. ஆனால் இதை மறைத்து மக்களின் காதுகளில் பூவை வைப்பதற்கு இவர்கள் எல்லோரும் முயற்சிக்கிறார்கள்” என எதிர்க்கும் தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனர், காரணம் கூறுகின்றனர்.

மேலும் இந்தத் தரப்பின் குற்றச்சாட்டானது, “இந்தப் பேச்சுகள் பயனற்றவை. பெறுமதியற்றவை. ஏனென்றால், பேச்சுகளில் பங்குபற்றிய அமெரிக்கப் பிரதிநிதிகளின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் “இலங்கையிலிருந்து வந்த சிறுபான்மை பிரதிநிதிகளின் Minority representatives கருத்துகள் கேட்டறியப்பட்டன” என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது. Google லும் கூட அப்படித்தான் இலங்கைத்தமிழர்கள் விழிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, இலங்கைச் சிறுபான்மைத் தரப்பைப் பிரதிபலிக்கும் அரசியற் கட்சி என்றே கூறுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (Tamil National Alliance, TNA) என்பது இலங்கையின் தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டணியாகும். இது இலங்கைத் தமிழ் சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. (The Tamil National Alliance Tamil) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ISO 15919: tamiḻt tēciyakkūṭṭamaippu; TNA) is a political alliance in Sri Lanka that represents the country’s Sri Lankan Tamil minority.)



இது எவ்வளவு இழிவான, பலவீனமான நிலையை உருவாக்கியுள்ளது? தமிழ் மக்களுடைய இதுவரையான போராட்டத்தையும் தமிழ் மக்கள் ஒருதேசிய இனம் என்ற அடிப்படையையும் கூடக் கவனிக்காமல் எப்படி இந்தப் பேச்சுகளில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று இவர்கள் பங்குபற்ற முடியும்? இதற்கான அங்கீகாரத்தையும் அதிகாரத்தையும் கொடுத்தது யார்? உண்மையில் இந்த அடிப்படைத் தவறை அமெரிக்கத் தரப்பிடம் முதலில் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும்.

சிறுபான்மைப் பிரதிநிதிகளாக நாம் பேசவில்லை. நாங்கள் ஒரு தேசிய இனத்தின் பிரதிநிதிகள். நமக்கென்ற வரலாறும் வரலாற்றுத் தாயகமும் தேசிய இனமொன்றின் அடிப்படைகளும் நமக்கு உண்டென்பதைச் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். அதைச் செய்யாமல் Minorities என்பதற்கு சிரித்துக் (பல்லிளித்து) கொண்டேயிருந்தால் (அல்லது பம்மிக்கொண்டிருந்தால்) அவர்கள் அந்த (Minorities ) அடிப்படையில்தான் இந்தப் பிரச்சினையை - தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினையைப் பார்ப்பார்கள். இந்த அடிப்படையில்தான் தீர்வையும் வலியுறுத்துவார்கள். இந்த நிலையில் பிறகெப்படி, எந்த அடிப்படையில் அரசியல் தீர்வு பற்றிப் பேச முடியும்? அந்தத் தீர்வு எவ்வாறானதாக அமையும்? அதனால் பயனென்ன?

எனவேதான் நாம் இதை - இந்த நாடகத்தை - எதிர்க்கிறோம். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு யாருடைய கைப்பொம்மைகளாகவும் இருக்க முடியாது. அப்படி இருப்பதாக இருந்திருந்தால் இவ்வளவு அழிவையும் இவ்வளவு கால விரயத்தையும் நாம் - நமது இனம் - சந்தித்திருக்கத் தேவையில்லை.

மக்கள் கூட்டமைப்புக்கு ஆணை தந்ததும் சுமந்திரனை மக்கள் தேர்வு செய்ததும் அரசியல் வியாபாரம் செய்வதற்கல்ல. அரசியல் தீர்வைப் பெறுவதற்கும் மக்கள் நலனைப் பாதுகாப்பதற்குமேயாகும். அதற்கான முன்னெடுப்புகளைச் சரியாக முன்னெடுப்பதற்கே. இப்படி வழங்கப்பட்ட ஆணையையும் அதிகாரத்தையும் தமது தனிப்பட்ட நலன்களுக்காகத் துஸ்பிரயோகம் செய்வதற்கல்ல.

இந்தப் பயணத்தின் போது மட்டுமல்ல, ஏற்கனவே கடந்த நல்லாட்சிக் காலத்திலும் சுமந்திரனும் சம்மந்தனும் இப்படித்தான் குழப்பமாக - மாறி மாறிக் கதைப்பார்கள். சிங்கக் கொடியைத் தூக்குவார்கள். பிறகு அதற்கொரு மறுப்பு விளக்கத்தைச் சொல்லுவார்கள். ஒற்றை ஆட்சியை ஏற்றுக்கொள்வார்கள். நெருக்கடிகள் வந்தால், மக்களிடம் எதிர்ப்புக் கிளம்பினால், பிறகு அதை மறுத்த மாதிரி அதற்கொரு நியாயம் சொல்வார்கள்.

முதலில் அரசியல் விடயத்தில் நிதானமும் தெளிவும் வேண்டும். அதில் உறுதிப்பாடு வேண்டும். இதை சம்மந்தனும் சுமந்திரனும் கடந்த காலத்தில் வெளிப்படுத்தத் தவறியுள்ளனர். இதனால்தான் இவர்களுக்கு தமிழ் மக்களிடத்தில் பலமான எதிர்ப்பு உருவாகியுள்ளது. நம்பகத்தன்மையை இழந்தால் மக்கள் சந்தேகிப்பார்கள். எதிர்ப்பார்கள். இது தவிர்க்க முடியாது. இதுவே நடந்து கொண்டிருக்கிறது.

இதையெல்லாம் மறைத்துக் கொண்டு சுமந்திரன் கொம்பனிக்குச் சிலர் வெள்ளையடிக்க முற்படுகிறார்கள். அவர்கள் தங்களுடைய மனச் சாட்சியையும் அறிவையும் தொட்டுச் சொல்லட்டும். சுமந்திரனுடையதும் சம்மந்தனுடையதும் அரசியல் அணுகுமுறைகளும் நெறிமுறைகளும் சரியா?” என்று.

முக்கியமாக நல்லாட்சிக்காலத்தில் இவர்கள் ஆதரவளித்த அரசாங்கத்தின் மூலம் தமிழ் மக்களுக்குச் சாத்தியமாக்கிய வெற்றிகள், நலன்கள் என்ன? என்று. இதற்கு உலகத் தமிழர் பேரவையும் பதிலளிக்க வேண்டும். ஏனென்றால் அவர்களும் அந்தச் சந்தர்ப்பத்தில் அந்த அரசாங்கத்தையும் கூட்டமைப்பையும் ஆதரித்து நின்றனர்”.

இந்தத் தரப்பினர் மேலும் சொல்கிறார்கள் (கொதிக்கிறார்கள்) “தமிழரசுக் கட்சியிலும் கூட்டமைப்பிலும் தமக்கேற்றவிதமான தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும் என்று இந்தியாவும் அமெரிக்காவும் விரும்புகின்றன என்பதை நாம் விளங்காமல் இருக்க முடியுமா? ஏன் இலங்கைக்குக் கூட சூழ்ச்சிகரமாக இந்த விருப்பம் உண்டு. யாருடனும் பகைத்துக் கொள்ளாத - சொந்த மக்களையும் விட மாற்றாருக்கு இனிப்பாக நடந்து கொள்ளத் தக்க - ஒரே தரப்புத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத்தான்.

அதிலும் சம்மந்தனும் சுமந்திரனும் இதில் நல்ல சமத்தர்கள். கொழும்புடனும் இனிப்பாக நடந்து கொள்ளத் தக்கவர்கள். இதை வெளியுலகமும் இலங்கையும் சரியாகவே மதிப்பிட்டுள்ளன. ஆகவே அவர்கள் இந்தத் தலைமைத்துவத்தையே ஆதரிப்பர். வாழ வைப்பர். இதற்கான ஏற்பாடுகளில் ஒன்றே இந்தப் பயணங்களும் இலங்கையிலும் வெளியிலும் நடக்கின்ற சந்திப்புகளும்” என்று.

இவர்கள் தங்களுடைய நியாயங்களை இவ்வாறு சொன்னாலும் அதைப் பிரயோக நிலையில் கையாள்வதும் வெளிப்படுத்துவதும் தவறான வழிமுறைகளாகவே உள்ளன.

(18ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

டிசம்பர் 2021

# வறுமையின் தாண்டவத்தால் வாழ்வை இழக்கும் ஆப்கான் சிறுமிகள்!

● **ந.பரமேஸ்வரன்**

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில்அந்நாட்டில்வறுமையும்தாண்டவமாடுகின்றது. இந்நிலைமை மேலும் மோசமடைந்து, 2022 ஆகும்போது - உலகிலேயே மிகவும் வறுமையான நாடாக ஆப்கானிஸ்தான் மாறக்கூடும் என ஐ.நாவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) எச்சரிக்கை விடுத்துள்ளது. தற்போதைய நிலைவரப்படி அந்நாட்டு சனத்தொகையில் 97 வீதமானோர் வறுமையின் பிடிக்குள் சிக்கியுள்ளனர் என்பது வேதனைக்குரிய விடயமாகும். இதனால் ஆப்கானிஸ்தான் மக்கள் பல பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அம்மக்களை காரிருள் சூழ ஆரம்பித்துள்ளது. ஏதேனும் ஒரு வழியில் ஒளி பிறக்காதா என வழிமீது விழிவைத்து காத்துக்கொண்டிருக்கும் மக்களை நோக்கி துன்பங்களே படையெடுத்துவருகின்றன.

எதிர்வரும் மாதங்களில் ஐந்து வயதுக்குட்பட்ட 3 மில்லியன் குழந்தைகள் போஷாக்கின்மையை எதிர்கொள்ள நேரிடும் என UNDP வெளியிட்டுள்ள அறிக்கையில் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. இது ஒருபுறம் இருக்க, தமது பிள்ளைகளை பெற்றோர் விற்பனை செய்யும் சம்பவங்களும் மறுபுறத்தில் நாளாந்தம் அதிகரித்துவருகின்றன. இளம் பெண்கள் பகிரங்கமாகவே விற்கப்படும் அவலமும் அரங்கேறிவருகின்றது. மனித உரிமை செயற்பாட்டாளர்களால் இதனை சகித்துக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் வறுமையைக் காரணம் காட்டி தமது செயலை நியாயப்படுத்துவதற்கே விற்பனையில் ஈடுபடுபவர்கள் முற்படுகின்றனர்.

இந்நிலைமைக்குள் மாட்டிக்கொண்ட மகுல் என்ற பத்து வயதுசிறுமி அழுது புலம்பும் காட்சியானது மனிதநேயம் மிக்கவர்களை நிலைகுலைய வைத்துள்ளது. அதேபோல சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

குடும்பத்தினரின் வறுமையை போக்குவதற்காகவே இச்சிறுமி தனது அண்டை மாநிலமான கோர் மாநிலத்தைச்சேர்ந்த 70 வயது வயோதிபர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளார். எதுவுமே அறியாத அச்சிறுமி விழிநீர் வடித்தப்படி தற்போது நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார். அச்சிறுமியின் சுதந்திரமும், தனக்கு ஏற்ற வகையில் வாழும் உரிமையும் சிறு வயதிலேயே பறிக்கப்பட்டுள்ளமை பெருங்கொடுமையாகும்.

மகுலின் தந்தை இப்ராஹிம் என்பவர், அண்டை மாநிலத்தைச்சேர்ந்த ஒருவரிடம் இரண்டு லட்சம் ஆப்கான் பணம் அதாவது 2, 200 அமெரிக்க டொலர் கடன் வாங்கியுள்ளார். எனினும், அவரால் கடனை திருப்பிச்செலுத்த முடியவில்லை. இதனால் கடுப்பான கடன் கொடுத்தவர், கடனை திருப்பி தராவிட்டால், தலிபான்களின் சிறைக்குள் தள்ளுவேன் என இப்ராஹிமை எச்சரித்துள்ளார். இந்நிலைமையை சமாளிப்பதற்காகவே தனது பெண்பிள்ளையை விற்பனை செய்வதற்கு இப்ராஹிம் முடிவு செய்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

"நான் மகுலை தவறாக பயன்படுத்த மாட்டேன். வீட்டு வேலைகள் செய்விப்பதற்காகவே அழைத்துச்செல்லவுள்ளேன்." என கடன் கொடுத்தவர் கூறுகிறார். ஆனால் அவரது கண்களைப்பார்த்தால் மகுலின் குடும்பத்தினரை மிரட்டுவது போலுள்ளது. இப்படியான சம்பவங்கள் இடம்பெயர்ந்தோர் முகாமில் பரவலாக இடம்பெற்று



வருகின்றன. பத்து வயதுச்சிறுமியொருவர் 70 வயது வயோதிபருக்கு விற்பனை செய்யப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

ஒன்பது அங்கத்தவர் கொண்ட குடும்பமொன்றில் தந்தைக்கு எதுவித தொழிலும் இல்லை. அத்துடன் மாற்றுத்திறனாளி அவர். தனது நான்கு வயது, ஒன்பது வயது நிரம்பிய இரண்டு சிறுமிகளையும் 1,100 டொலர்களுக்கு விற்பனை செய்யவுள்ளார். இது இன்னொரு சம்பவம்.

நான்கு வயதான மண்ணிற கண்களைக்கொண்ட செயிற்றன், இது எதற்காக நடைபெறுகிறது என்று எனக்குத்தெரியும். ஏனென்றால் நாங்கள் ஏழைகள் எமக்கு சாப்பிடுவதற்கு உணவு இல்லையென அவர் கூறுகிறார். செயிற்றனின் பாட்டி ரொஷானா எமக்கு வேறு வழியில்லை என கூறுகிறார்.

பர்வானா என்ற ஒன்பது வயதுச்சிறுமி ஆப்கானிஸ்தானின் வடமேற்கு பகுதியைச்சேர்ந்த 55 வயது நபர் ஒருவருக்கு திருமணம் செய்வதற்கு விற்கப்பட்டுள்ளார். "எனது முதல் மனைவி பர்வானாவை நன்கு கவனித்துக்கொள்வார்." என அந்நபர் குறிப்பிட்டுள்ளார்.

பல மாதங்களுக்கு முன்னர் பர்வானாவின் தந்தை பர்வானாவின் 12 வயது சகோதரியை விற்பனை செய்திருந்தார். பர்வானா தான் ஒரு ஆசிரியையாக வர வேண்டுமென்ற கனவுடன் இருந்ததாக கூறுகிறார். பர்வானாவை கையளிக்கும் நிகழ்வில் பர்வானா தலையை மூடி உடை அணிந்திருந்தார். கழுத்தில் ஒரு மணமகளைப்போல் மாலை ஒன்று அணிந்திருந்தவாறு பலத்த சத்தத்துடன் தேம்பிக்கொண்டிருந்தார்.

தந்தை அழுதவாறே, புதிய முதலாளியிடம், இவள் உனது மனைவி இவளை கவனமாக பார்த்துக்கொள் தயவு செய்து அடிக்க வேண்டாம் இவளுக்கு நீ தான் பொறுப்பு என கூறினார். குர்பான் அதை ஏற்றுக்கொண்டு பர்வானவை தனது தோளில் அழுத்தி தூக்கிக்கொண்டு வாசலில் காத்திருந்த கரை நோக்கிச்சென்றார்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் தனது இரண்டு வயது மகளையும் விற்கப்போவதாக குறித்த தந்தை கூறுகிறார்.

ஹமீட் என்ற 36 வயது நபர், ஐ.நா அலுவலகத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றி வந்தார். இப்போது இவருக்கு வேலை இல்லை. அதனால் தனது 15 வயது மகள் ஆயிஷாவை 45 வயதான ஒருவருக்கு விற்பனை செய்யப்போகிறார். நண்பிகளுடன் விளையாடிக் கொண்டிருந்த ஆயிஷாவுக்கு இது பற்றி எதுவுமே தெரியாது.

ஆப்கானிஸ்தானில் சிறு வயது திருமணங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.எனினும், தலிபான்களின் மீள்வருகையின் பின்னர் ஏற்பட்ட வறுமை காரணமாக சிறு வயது திருமணங்கள் அதிகரித்துள்ளன.

தலிபான்கள் பெண்கள் கல்வி கற்பதற்கு தடை விதித்தமை தான் சிறு வயது திருமணங்கள் அதிகரித்தமைக்கு காரணம் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தைச்சேர்ந்த பார் கூறியுள்ளார்.

ஒரு பெண் திருமணத்திற்காக விற்கப்பட்டால் அவளால் அவளது கல்வி பற்றியோ சுயாதீனமாகவோ சிந்திக்க முடியாது. அவளது எதிர்காலம் இருள் நிறைந்ததாகவே இருக்கும். பெரும்பாலான பெண்கள் மிக இளமையாக காணப்படுகின்றனர். இவர்களது உடல் உடலுறவுக்குரிய தகுதியை அடையவில்லை. இதன் காரணமாக 20-24 வயதான பெண்களை விட 15-19 வயது பெண்களிடையே சிசு மரண விகிதம் இரண்டு மடங்காக காணப்படுகிறது என UNDP தெரிவித்துள்ளது.

தலிபான்களின் இடைக்கால அரசின் பட்கிஸ் மாகாண ஆளுநர் மௌலவி அப்துல் சத்தார் இந்த சிறு வயது திருமணங்கள் யாவும் வறுமையின் காரணமாகவே இடம் பெறுகின்றன ஷரி ஆ சட்டத்தின் மூலமோ ஐக்கிய அரபு அமீரக அரசாங்கத்தாலோ அமுல்படுத்தப்படவில்லை என்றார். ■

---

# யார் துரோகி...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவில் சுமந்திரனுக்கு எதிர்ப்புக் காட்டிய விதமும் கடந்த காலத்தில் பிரித்தானியாவிலும் அவுஸ்திரேலியாவிலும் எதிர்த்து விரட்டியதும் ஏற்புடையதல்ல. அது அடிப்படையான ஜனநாயக உரிமையை மறுதலிப்பதாகும். மட்டுமல்ல, அரசியற் பண்புமல்ல.

ஆனால், இந்தப் போக்கை உருவாக்கியதே தமிழரசுக்கட்சியும் பின்னர் தமிழரசுக்கட்சியும் தமிழ்க் காங்கிரசும் இணைந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியுமே. எதிர்க்கருத்தாளர்களையும் மாற்று நிலைப்பாட்டினரையும் "துரோகிகள், ஒட்டுண்ணிகள்" என்று அடையாளப்படுத்தி மறுதலிப்பைச்செய்து காட்டியதே தமழரசுக் கட்சிதான்.

பின்னாளில் இதற்கான அறுவடையையும் அது கைமேல் பலனாகப் பெற்றது. தர்மலிங்கம், ஆலாலசுந்தரம், அமிர்தலிங்கம் கொலைகள் என்று தொடர்ந்து வந்த இந்த அறுவடை இப்பொழுது சம்மந்தன், சுமந்திரனில் எதிர்ப்பாக வந்து நிற்கிறது. இது இதோடு நிற்கப்போவதில்லை. இன்னும் யார் யாருடைய தலைகளில் இறங்குமோ? என்ன வடிவமெல்லாம் எடுக்குமோ!

ஆனால் நாம் இதை - இந்த மறுப்புப் போக்கை அனுமதிக்கவோ ஆதரிக்கவோ முடியாது. ஒருவர் கருத்துரைக்கும் இடத்தை, அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியே ஆக வேண்டும். விவாதங்கள் அதன் பிறகுதான்.

எதிர்ப்புக் காட்டுவதாக இருந்தாலும் அதற்குரிய ஜனநாயக நடைமுறைகளைப் பின்பற்றியிருக்க வேண்டும். கறுப்புப் பட்டிகளை அணிந்தோ நியாயமான கேள்விகளை அறிவு பூர்வமாக முன்வைத்தோ இதைச் செய்திருக்க வேண்டும்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட வேண்டும். சுமந்திரனையும் அவருடைய செயற்பாடுகளையும் ஆதரிப்பவர்களிடமும் நாம் கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது. இந்தப் பயணத்தின் அனுசரணையோடு தொடர்புள்ளவர்களும் அதில் பங்கேற்று ஆதரிப்போரும் இவர்களே. இவர்களுக்கு எதைப்பற்றியும் கேள்விகளில்லை. அல்லது பொருட்டில்லை. சமகாலச் சூழலில் தங்கள் அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் மட்டுமே குறி.

இவர்கள் மூன்று வகையினர். ஒன்று புலம்பெயர் நாடுகளில் மிக வசதியான வாழ்க்கைத் தளத்தைக் கொண்டவர்கள். ஏறக்குறைய பிரமுகர் நிலையினர். ஆனால் அந்தப் பிரமுகர் நிலையைப் பேணுவதற்கான பின்னணிகள் குறைவாக இருப்போர். அதனால் சுமந்திரன் போன்ற சக்திகளை நிபந்தனையின்றி ஆதரிக்கின்றனர். இதன் மூலம் ஈழ அரசியல் விவகாரங்களில் தங்களின் பாத்திரத்தை உயர்த்த முற்படுகின்றனர். இது சுமந்திரனுக்கும் வாய்ப்பாக இருக்கிறது. ஆக இந்த மேல்வர்க்கப் பிரதிபலிப்பின் வெளிப்பாடுகளே தற்போது நடப்பவை.

இரண்டாவது, உள்நாட்டில் உள்ள சுமந்திரன் - கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மற்றும் ஆதரவு ஊடகவியாளர்கள். இவர்கள் பகிரங்க விவாதத்துக்கோ எழுப்பப்படும் கேள்விகளுக்கோ ஒழுங்கான முறையில் பதிலளிப்பது கிடையாது. பதிலாக நியாயப்படுத்தல்களைச் செய்வதிலேயே குறியாக இருக்கிறார்கள். இப்போது கூட "சுமந்திரன் ஒரு மக்கள் பிரதிநிதி. மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். ஆகவே அவரை எதிர்ப்பதும் அவமதிப்பதும் அந்த மக்களை - அவரைத் தெரிவு செய்த மக்களை அவமதிப்பதாகும்" என்றெல்லாம் வித்தகம் பேசி வருகின்றனர்.

இது சுமந்திரனின் மீதுள்ள பற்று, அபிமானம், மோகம் போன்றவற்றால் எழலாம். தனிப்பட்ட ரீதியில் இப்படிச் செயற்படவும் ஆதரவாக எதையும் சொல்லவும் இவர்களுக்கு உரிமையுண்டு. சுமந்திரனை ஆதரிக்கவும் விடவுமான உரிமைகளுமுண்டு. ஆனால், சுமந்திரனை, சம்மந்தனை, கூட்டமைப்பை தெரிவு செய்த மக்களை சுமந்திரனும் சம்மந்தனும் கூட்டமைப்பினரும் அவமதிப்பதைப்பற்றி, பொறுப்பின்மையாக நடப்பதைப்பற்றி எப்போதாவது பேசியிருக்கிறார்களா? அப்படிப் பேசத் தயாராக இருக்கிறார்களா? தமிழரசுக் கட்சியிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலும் ஜனநாயகத்தை இல்லாதொழித்திருப்பதைப் பற்றிச் சிந்தித்திருக்கிறார்களா? இதற்கெல்லாம் இவர்களுடைய நீதி என்ன?

மூன்றாவது, சுமந்திரனுடைய - கூட்டமைப்பின் அரசியலுடன் - உடன்படாதவர்கள். ஆனால், அவருடைய பேசும் உரிமையையும் அவர் தன்னுடைய அரசியலை முன்னிறுத்துவதற்கான உரிமையையும் வழங்க வேண்டும். அதைத் தடுக்க முடியாது. அது ஜனநாயக விரோதம் என்போர். என்னுடைய நிலைப்பாடும் இதுவே. ஆனால், இவர்களின் இந்த நியாயமான குரலை சுமந்திரன் (த.தே.கூ) தந்திரோபாயமாகத் தனக்கேற்ற விதமாக எடுத்துக் கொள்ளும் போக்குத் தொடருமே தவிர எதையும் பரிசீலிக்கத் தயாராக இல்லை. தன்னுடைய அதிகாரத் தொனிமிக்க அரசியலை மாற்றிச் செயற்படப்போவதுமில்லை. சுருக்கமாகச் சொன்னால் அவர் எப்போரும் ஒரு Police தனத்தோடுதான் இருப்பாரே தவிர Politician னாகச் செயற்படப் போவதில்லை.

தவிர, இதற்கெல்லாம் நம்முடைய இரத்தத்தைச் சூடேற்றுவதால் ஆகப்போவதொன்றுமில்லை.

ஆக மொத்தத்தில் இவ்வாறான ஒரு கொதிப்புச் சூழலில்தான் கடந்த இரண்டு வாரங்களைத் தமிழ்த்தரப்புக் கடத்தியது. அடுத்த வாரங்களில் மாவீரர் நாள் தொடர்பான சூடான சேதிகள் இருக்கும். அதற்குப் பிறகும் ஏதாவது வராமலா போய் விடும்? இப்படியே தமிழ் மக்களுக்கு காலந்தோறும் அவல் கிடைத்துக்கொண்டேயிருக்கும். ■



# தமிழர் நிலம் விழுங்கும் "பேரினவாத" பூதங்களின் ஆக்கிரமிப்பு நீடிப்பு!

● ஜெரா

இலங்கை தீவின் தலையாக இருக்கிறது யாழ்ப்பாணம். அதனால் இத்தீவின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக யாழ்ப்பாணம் திகழ்கின்றது. இலங்கை இனப்பிரச்சினையின் ஒரு சாராராகிய தமிழர்களைப் பெருந்தொகையாகக் கொண்டிருக்கும் இம்மாவட்டமானது, வரலாற்றுத் தொடக்க காலம்தொட்டே பல்வேறு அந்நியர்களது ஆக்கிரமிப்புக்களுக்கும் உள்ளாகியிருக்கிறது. ஆயினும் எந்த ஆக்கிரமிப்பினுள்ளும் அமிழ்ந்துபோகாது தன்னை விடுவித்துக்கொண்டு சுதந்திரமடையும் நிலமாகவும் இருந்து வந்துள்ளது

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், முழு இலங்கையும் சிங்களவர்களுக்கே உரியது என்கிற கருதுகோளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் சூழ்ச்சிக்குள் யாழ்ப்பாண மாவட்டம் வெகுவாகவே பாதிக்கப்பட்டது. கல்வி தரப்படுத்தல், பொருளாதார தடைகள், படுகொலைகள், அரசியல் பழிவாங்கல்கள் என அரசு ஏவிய அனைத்து சதிக்கணைகளையும் யாழ்ப்பாண மாவட்டம் முதன்முதலில் எதிர்கொண்டது. இதனால் பல நூற்றாண்டுகளாகத் தலைமுறைதலைமுறையாக நிலம்பெயராது வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்தனர்.

முதுசொங்களின் அடையாளமாகவும், பண்பாட்டின் சின்னமாகவும், மானுட உழைப்பின் அடையாளமாகவும் நிமிர்ந்து நின்ற வீடுகள், ஆலயங்கள், மடங்கள், இடிந்தழிந்து போயின. ஆயினும் இனம் மீதும், தம் நிலம் மீதும் கொண்ட ஓர்மம் காரணமாக யாழ்ப்பாணம் விரைவாகவே தன்னை புதுப்பித்துக்கொள்கின்றது.

2009 ஆம் ஆண்டில் ஈழப்போர் முடிவுக்கு வர, யாழ்ப்பாணம் மேலும் புதுவகையான ஆக்கிரமிப்புக்களை எதிர்கொண்டது. கேட்பாரற்ற காணி போல ஆகிவிட்ட யாழ்ப்பாணத்தை இலங்கை அரச நிறுவனங்கள் ஒருபக்கம், இராணுவத்தினர் ஒரு பக்கம், இந்தியா ஒருபக்கம் எனப் பங்கிட்டுக்கொள்ளத் துடிக்கின்றன. ஏற்கனவே யாழ். குடாநாட்டின் வலிகாமம் வடக்கு பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் காணிகள் உயர் பாதுகாப்பு வலயமாகவும், பலாலி விமான நிலையம் என்கிற பெயரில் இந்தியாவுக்கும் வழங்கப்பட்டிருக்க அந்தப் பகுதிகளின் பூர்வ குடிகளாகிய தமிழர்கள் 20 இற்கும் மேற்பட்ட நலன்புரி நிலையங்களில் தற்போதும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அம்மக்களுக்கு நிரந்தரமான காணிகளோ, வீட்டுத்திட்டமோ, சுகாதார வசதிகளோ, சீரான கல்வி வசதியோ செய்துகொடுக்கப்படவில்லை. இந்நிலையில்தான், யாழ்ப்பாணத்திலும், யாழ்ப்பாணத்திற்கு வெளியிலும் வசிக்கும் அந்நிலத்தினது பூர்வகுடிகளது காணிகளை இராணுவத்திற்கு வழங்கும் பொருட்டு அளவீடு செய்யும் வேலைத்திட்டங்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கு தவிர, மந்துவில், மானிப்பாய், கொடிகாமம் போன்ற பகுதிகளில் உள்ள தனியார் காணிகளில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றுக்கு மேலதிகமாகவே மேற்குறித்த காணி கையகப்படுத்தும் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையின் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தில் ஒரு சிவிலியன் தலைக்கு 3 இராணுவத்தினர் என்கிற கணக்கில் படைக்குவிப்பு இடம்பெற்றுள்ளதாக முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சி.வி.விக்கினேஸ்வரன் நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு நாட்டின் மொத்த படைக்குவிப்பும் காணப்படும் வட மாகாணத்தில் அனைத்து சிவில் செயற்பாடுகளும் இராணுவமயப்பட்டிருக்கின்றன. இது போதாதென்று மேலும் இராணுவத்தரப்பிற்கு பொதுமக்களது காணிகளைக் கோருவதானது இங்கு பொதுமகன் ஒருவர் சுதந்திரமாக வாழ்வதையே கேள்விக்குறியாக்கும். கடந்த நல்லாட்சி காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவம் கையகப்படுத்திவைத்திருந்த பெருந்தொகையான பொது மக்களது காணிகள் விடுவிக்கப்பட்டன.

ஆனால் மறுவலயமாக அரச திணைக்களங்கள் ஊடாகப் பராமரிப்பற்ற காணிகள், உரிமையாளர் வெளிநாட்டில் உள்ள காணிகள், வாடகைக்கு விடப்பட்டிருப்பவை கணக்கெடுக்கப்பட்டன. இந்தக் கணக்கெடுப்பு ஏனெனில், இந்த வகைப்படுத்தலுக்குள் உள்ளடங்கும் காணிகளை பொதுப்பிரகடனம் ஒன்றின் ஊடாக அல்லது வழமையான அரச வேலைத்திட்டம் ஒன்றின் ஊடாக அவற்றை இராணுவத்திற்குப் பெற்றுக்கொடுப்பதற்குத்தான். இவ்வளவு காலமும் இராணுவம் அடத்தாகக் கைப்பற்றப்பட்ட காணிகளை, இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக சட்டத்தின்படி பெற்றுக்கொள்ளமுடியும்.

அந்த வகையில்தான், வல்லாட்சி எனச் சொல்லப்படும் கோத்தபாய தலைமையிலான பாதியளவிலான இராணுவ ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்துக் காணிகளை அபகரிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு மண்டைதீவு, புங்குடுதீவு, வேலனை ஆகிய இடங்களில் காணி அளவீட்டுக்கான அதிகாரிகள், இராணுவத்தினர் வருகைதந்திருந்த போதிலும், அந்தந்தப் பகுதி மக்களது எதிர்ப்பின் காரணமாக அதனைச் செய்யமுடியாது திரும்பி சென்றனர். இதனால் மேற்குறிப்பிட்ட மூன்று இடங்களது காணி அளவீடுகளும், இராணுவத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வுகளும் நின்றுபோயின. இத்தகைய காணி அளவீட்டுக்கு ஒத்துழைப்பு வழங்காத சில அரச அதிகாரிகள் வெளிமாவட்டங்களுக்கு இடம்மாற்றம் வழங்கப்பட்டதோடு, இந்தத் திட்டங்கள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டன. இந்த இடங்களை விட்டாலும், யாழ்ப்பாணத்தின் ஒரு முனைப் பகுதியான மாதகலில் அடையாளம் காணப்பட்ட காணிகளை கையகப்படுத்துவது இலகு என்றே இராணுவம் கருதிக் களமிறங்கியது. ஏனெனில் இராணுவத்திற்கும், சிங்கள மேலாதிக்கமுடைய அரசுக்கும் மாதகல் மிக முக்கியமான நிலம்.

இலங்கைக்குப் பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டமை குறித்து முன்வைக்கப்படும் வரலாற்றுக் கதையில் மாதகல் முக்கிய இடம்பிடிக்கிறது. இலங்கையின் வரலாற்று ஏடுகளில் ஜம்புகோளப்பட்டிணம் எனப் பெயர் குறிக்கப்பட்டுள்ள மாதகலுக்கும் பௌத்த மதத்திற்கும் நெருக்கமான கதையொன்றும் உள்ளது. அதாவது இத்தீவிற்குப் பௌத்தத்தைப் பரப்பும் நோக்குடன் புனித வெள்ளரசு மரக்கிளையுடன் மாதகலுக்கு வந்திறங்கிய சங்கமித்தை பிக்குணி அங்கிருந்தே நாட்டிற்குள் பிரவேசித்ததாகக் குறிப்பிடுகின்றது.

எனவே சிங்கள வரலாற்றுடன் தொடர்புடைய மாதகலின் பெரும் பகுதிகளை இராணுவம் தனது கட்டுப்பாட்டின் கீழேயே வைத்திருக்கின்றது. சங்கமித்தை பிக்குணி வந்து இறங்கியதாகக் குறிப்பிடப்படும் துறை உள்ளிட்ட பல ஏக்கர் காணிகளை வளைத்துப் பிடித்துள்ள இராணுவத்தினர் தொல்லியல் திணைக்களத்தின் தலையீடு இல்லாத காலத்திலேயே பிரம்மாண்டான விகாரைகளையும், பௌத்த கட்டட எச்சங்களை மாதகலில் அமைத்திருந்தது. சம்புவில்துறை என அழைக்கப்படும் பகுதியின் பெயரை தம்பகொலபடுண என பெயர் மாற்றியதோடு, தெற்கிலிருந்து சுற்றுலா வரும் சிங்கள மக்கள் பெருந்தொகையில் வந்துசெல்லும் இடமாகவும் மாற்றப்பட்டிருக்கிறது.

தற்போது இதற்கு மேலதிகமாக பௌத்த கட்டடத் தொகுதியுடன் இணைப்பதற்காக அதற்கு அருகில் உள்ள 14 ஏக்கர் தனியார் காணிகளை அபகரிக்கவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சங்கமித்தை வந்திறங்கியது என்பதே வெறும் கதை மட்டுமே. அதற்கு இந்திய தரப்பிலோ யாழ்ப்பாணத்தின் வரலாற்று ஏடுகளிலோ எவ்வித ஆதாரங்களும் இல்லை. உலகின் எப்பாகத்திலும் இப்படியொரு வரலாற்றுச் சம்பவம் இடம்பெற்றமைக்கு தொல்லியல் ஆதாரங்கள் கூட இல்லை. இந்நிலையில் ஒரு புனைவாக எழுதப்பட்ட வரலாற்றுக் கதையை சோடிக்கும் நோக்குடனேயே மாதகலில் தம்பகொலபட்டுண இராணுவத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது அதனை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடனேயே அந்தக் கட்டடத் தொகுதிக்கு அண்மையாக உள்ள 14 ஏக்கர் காணிகள் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தக் காணியினது உரிமையாளர்கள் கொழும்பிலும், வெளிநாடுகளிலும் வசிக்கின்றனர். சிலர் மாதகல் பகுதியிலும் வசிக்கின்றனர். ஆயினும் அவர்களிடம் புதுப்பிக்கப்பட்ட காணி உரித்திற்குரிய ஆவணங்கள் இல்லை. இதனை ஒரு காரணியாக வைத்தே காணி அபகரிப்பு நடத்தப்படுகின்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்குடன் போராட்டம் நடத்தும் மக்களை இராணுவம் கொட்டான்தடிகளுடன் சென்று மிரட்டுகிறது. புலனாய்வாளர்கள் படமெடுத்து மிரட்டுக்கின்றனர்.

இவ்வளவுக்கும் மத்தியில் நின்றுதான் மாதகலின் காணி அபகரிப்புக்கு எதிராக மக்கள் போராடுகின்றனர். யாழ்ப்பாணத்தின் ஒரு முனையைக் காப்பாற்ற அவர்கள் அமைத்திருக்கும் அரணை அனைவரும் இணைந்து பலப்படுத்துவதே, இத்தீவின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் யாழ்ப்பாணத்தின் முக்கிய பணியாகும்.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


RAVANAS
RAVANAS BLINDS, CURTAIN SHUTTERS DOORS & WINDOWS
Free Measure & Quotes • Delivery & Install • Servicing All Suburbs
Our Services:
Blind Curtains | Plantation Shutter | Roller Shutters | Security Doors | Fly Screens | Outdoor Blinds
Aluminium Doors & Windows | Alfresco Glass Cover | Shower Screens | Mirrors | Wardrobe Doors
Contact: Raja (Roger) 0411 734 484 | 1300 572 540
Ravanas Group Pty Ltd 31/283 Rex Road, Campbellfield VIC 3061
Email : roger@ravanas.com.au
Web: www.ravanas.com.au

# புயலுக்குப்பின்...

**ஊழிக்காலம்-2**
**28**



அவனது உரையை ஆரம்பிக்கும் போதே எழுந்த கூச்சல் அவனை திகைக்க வைத்தது. என்றாலும் எதையோ சொல்ல முயன்று அவன் வாயைத் திறந்தான். “ஆ” என்று அவன் வாய் திறக்குமுன். “இல்ல அப்பிடி சொல்லயில்லை” என்று லீடர் கூறினாள்.

“அப்பிடித்தான் சொன்னாங்க” என்றாள் ஆமிக்காரியான குமாரி. இவள் ஒரு கலப்பினம். தாய் மலையகத்தமிழர், தந்தை சிங்களவர். வறுமைகாரணமாக இந்த தொழிலுக்கு வந்தவள். இரு மொழிகளும் பேசக்கூடியவள்.

“மொழிபெயர்ப்பில் பிழை வந்தால் அது பாரிய தவறாகிவிடும் குமாரி” என்றாள் பார்வதி.

அவன் நன்றாக குழம்பிப்போனான். சொன்னதை திருப்பி சொல்ல யாரும் எழாததால், பார்வதியின் பேச்சை செவிமடுத்தவன்.

“அம்மா நீங்க சொல்லுங்க என்ன சொன்னாங்க” என்று கேட்டான். பார்வதி மிகபணிவாக எழுந்து நின்று “சேர்,எங்களுக்கு விடுதலையில்லை என்றார்கள்” என்றாள்.

“ஆ! அதுதான். அதற்குத்தான் இந்த செயற்பாடுகளெல்லாம் நடக்கின்றன. நீங்கள் அமைதியாக இருந்து பயிற்சிபெற்று அதற்கான சான்றிதழ்களைப் பெற்று வெளியே சென்றால்தான் உங்கள் வாழ்வு பிரகாசமாக இருக்கும்” என தன் பேச்சை நகர்த்தியவன், உங்களுடைய பிரச்சனைகள் அனைத்தும் தீர்க்கப்படும். நீங்கள் சந்தோசமாக எங்களுடன் ஒத்துழைத்து நடந்தால் விரைவில் விடுவிக்கப்படுவீர்கள். மேலும் உங்களுக்காக வெளிநாடுகளோ அல்லது ஊரக நிறுவனங்களோ செலவிடவில்லை. சிறீலங்கா ராணுவத்தின் ஊதியத்தில்தான் உங்களுக்கான உணவு, வெளிச்சம், வீட்டுவசதி, தண்ணீர் வைத்தியம், தொலைக்காட்சிப் பெட்டி எல்லாம் வந்திருக்கிறது. உங்கள் அனைவருக்குமாக தினசரி பல லட்சம் ரூபாக்கள் உங்களுக்காக செலவிடப்படுகிறது.” என பெருமையோடு அவர் கூற,

“எங்கள வெளியால விட்டா இந்த செல்வு ஏன் உங்களுக்கு வருது.” ஏன்று முன்னால் இருந்தள் ஒருத்தி சொல்ல , அது அவருக்கு மறுபடியும் கோபத்தை மூட்டியது. அவளைப் பார்த்து ஆட்காட்டி விரலை நீட்டி ‘எழும்பு’ என சைகை செய்தான்.

அவள் எள்ளளவும் அஞ்சாமல் எழுந்து நின்றாள்.

“என்ன சொன்னத திருப்பி சொல்லுங்க”

“எங்கள விடுதலை செய்தா உங்களுக்கு செலவில்லை”அவள் சொன்னாள்.

அவன் கோபத்தோடு, அவளை நோக்கி கவனம் காட்டுவதாக தன் ஆட்காட்டி விரலை கொடகொடவென ஆட்டினான். வாயிலிருந்துவார்த்தைகள் வரவில்லை. ஒருவழியாக வார்த்தை வந்தபோது,

“அது நாட்டோட பிரச்சனை அதை அரசாங்கம்தான் சொல்லவேணும். நீ உனக்கு சொன்னத செய்” என்றான்.

“சரி தண்ணீர் கிடைக்காத ஆட்கள் இஞ்சால வாங்க” என்ற போது அந்த நான்கு வரிசை வீட்டாரும் அங்கால போனார்கள். மற்றவர்கள் கலைந்து போகலாம் எனறபின் தானே முன்நின்று வரிசைகளை ஒழுங்குபடுத்தி தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்தபின், தன் பரிவாரங்களுடன் வெளியேறினான்.

மறுநாள் சுதந்திர தினம் என்பதால் அதிகாலையிலேயே நடுவே இருந்த காணியில் இருதரப்பு முகாம் பிள்ளைகளும் ஒன்று கூடவேண்டும் என கட்டளை வந்தது என்றாலும் காலையிலேயே அவ்விடத்தை சுத்தம் செய்த ராணுவத்தினருடன் பார்வதியும் மாலா உதயா. சிறீதேவி, இன்னும் சில பிள்ளைகளும் போய் கூடமாட வேலை செய்தனர். கொடியேற்றுவதற்கான மரத்தை ராணுவத்தினர் நட்டனர் அதை



காட்டுமலர்களால் அலங்கரித்தனர் பிள்ளைகள். குறித்தநேரத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகி ராணுவத்தினரால் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

பிள்ளைகள் சார்பில் பார்வதியை உரையாற்ற சொன்னார்கள், அவள் பேசினாள். நிகழ்ச்சி முடிந்த பின்னர் அந்தப் பொறுப்பதிகாரி பிள்ளைகளிடம் நீங்கள் ஏன் தேசிய கீதம் இசைக்கவில்லை என்று கேட்டான். எல்லோரும் ஒற்றுமையாக எங்களுக்கு அது சிங்களத்தில் தெரியாது என்றனர். அவன் விடவில்லை “சரி தமிழில் பாடுங்கள்.” என்றான் மூன்று பிள்ளைகள் முன்வந்து பாடினார்கள். நிறைவாக ரோல்கோலிங் எனப்படும் ஆட்களை எண்ணி சரிபார்த்தல் நடந்தது . அதன்பின் லைனாகவே எழுந்து செல்லப்பணித்தான் முதல்முதலாக ஒழுங்காக வரிசைவாரியாக கலைந்து சென்றனர். அந்தக்காட்சி மிக அழகாக இருந்தது.

மாலையிலும் லைனுக்கான நேரம் வந்ததும் பிள்ளைகள் ஏனோ தானோ என்று புறப்பட்டு வந்து கொண்டிருந்தனர். இதற்காக பொறுப்பான லீடர் அவனிடம் வாங்கிக் கட்டிக்கொண்டாள். மேலும் அந்த அதிகாரி,

“இனி தொடர்ந்து பயிற்சிக்கென ஒதுக்கப்பட்ட இந்தக்காணியிலே இந்த மைதானத்திலேதான் ரோல் கோலிங் நடக்கும் காலையில் எட்டுமணிக்கு லைனில நிக்கவேணும். மாலையில் அவரவர் முகாமில் ஐந்தரைக்கு லைன். ஆட்கணிப்பு நடக்கும்” என அறிவித்தான். மேலும்,

“தினமும் தேசிய கீதம் பாடவேணும் அதை தொடர்ந்து இந்துமத பிரார்த்தனை கிறீத்தவமத பிரார்த்தனை இரண்டும் முடிய ரோல்கோலிங் நடக்கும்” என்றும் அறிவித்தான்.

மறுநாள். லைனில் பேசும்போது “நாளை முதல் ஒரு பயிற்சி வகுப்பு இரண்டு தினங்களுக்கு நடக்கும் இதே இடத்தில், எல்லாரும் தவறாம கலந்து கொள்ளவேண்டும்” என்று அறிவித்தான்.

காலையில் பிரம்ம குமாரிகள் சமாஜத்தினரின தியானப் பயிற்சி வகுப்பு ஆரம்பமானது. மன ஒரு நிலைப்பாடு என்பது ஆன்மாவில் நிலைத்து பரமாத்மாவுடன் ஒன்றிணைவது என சொல்லித்தரப்பட்டது. என்னதான் கட்டிப்போட்டாலும் எமது பெண்களின்முழு ஆன்மாவும், பரமாத்மாவுடன் ஒன்றிணைவதுக்குப் பதிலாக, தண்ணிபவுசருடனும் குழாய்க் கிணற்றுடனும் ஒன்றி தண்ணீர் வாளியுடன் நிலைத்து நின்றது. அதிகமானோர் போவதும் வருவதுமாக இருந்தனர்.

அந்த வகுப்பு மதிய இடைவேளையுடன் மாலை நான்கு மணிவரை நடந்தது. அதேநாள் சிலரது பெயர் அடங்கிய பட்டியலுடன் பயங்கரவாத புலனாய்வுப்பிரிவினர் வந்தனர். அந்த வகுப்பில் அந்தப் பெயர்கள் வாசிக்கப்பட்டு. சுமார் அறுபது பிள்ளைகள் உடனடியாக புறப்படும்படி பணிக்கப்பட்டனர்.

இவர்கள் எங்கே கொண்டு செல்லப்படுகிறார்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை. எனினும் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றிய பார்வதிக்கு அவர்கள் கொழும்புக்கு போகிறார்கள் என்பது தெரிந்தது.

ஒருவன் விநயமாக அவர்களிடம், “நீங்கள் ஒரு சின்ன நாட்டுக்காக சண்டை பிடிச்சு இங்க வந்திருக்கிறீங்க, இப்ப இலங்கைமுழுதும்உங்களுடையது தானே. இப்ப போகும்போது பாருங்க. இது எவ்வளவு அழகான ஊர் என்று.”கூறினான்.

சற்று நேரத்தில் பேருந்து வந்து விட்டது. அனைவரும் அந்த வாகனத்தில் ஏறினர். விடைகொடுக்க வந்தோர் ஆச்சரியமாக பார்த்துக் கொண்டு நின்றனர் போகிறவர்கள் தாம் விடுதலையாகிப்போவதாக நினைத்தோ என்னவோ மகிழ்ச்சியாக சென்றனர். ஆனால் அவர்கள் பூஸாவுக்குத்தான் கொண்டு சென்றனர் என்பது பின்னர் அங்கிருந்து வந்த கடிதங்கள்மூலம் அறிய முடிந்தது.

பிரம்ம குமாரிகளின் தியான வகுப்பு மூன்று நாட்கள் நடந்து முடிந்தது. பார்வதிக்கு ஆஸ்த்துமா இருந்தது. வெகுநாட்களாக தொல்லைதராமல் ஒதுங்கியிருந்த அந்த நோய் வெப்பம் கூடக்கூட மீண்டும் தலைதூக்கியது.

இந்த முகாமின் பின்புறத்தே ஒரு ஆஸ்பத்திரி அதாவது ஆரம்ப சுகாதார நிலையம் போல இயங்கி வந்ததாம். அது மொத்தமும் ஒரு சிறு கட்டடத்தை அண்டியதாக தரப்பால்களைக் கொண்டே அமைக்கப்பட்டிருந்தது. கால் ஏக்கர் அளவில் தீராந்திகள் நட்டு வேலியும் தரப்பால் கொண்டே அமைக்கப்பட்டிருந்தது. அதை எமது பிள்ளைகள் அக்குவேறு ஆணிவேறாக கழற்றி தத்தமது வீடுகளுக்கு கொண்டு சென்றனர். இந்த தரப்பால் தடி, இரும்புகள்தீராந்திகள் என்பன விட்டினுள் இருக்கைகளாகவும், பரண்களாகவும், தண்ணீர் தொட்டிகளாகவும் குளிக்குமிடங்களின் மறைப்பாகவும் மாறின.

நிறைய செக்கச்சிவந்த கெக்கரிப் பழங்கள் வளவில் ஆங்காங்கே பழுத்துக் கிடந்தன. கடுகு பெருஞ்சீரகம், தக்காளி மிளகாய்செடிகளும் வீட்டுக்கரைகளில் காய்த்தும் பூத்தும் கிடந்தன. ஆனால் இவற்றை யாரும் சீண்டுவதில்லை.

இப்போது அந்த ஆஸ்பத்திரியை மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பீ புளொக்கிலிருந்து நான்கு அணிகள் அப்பகுதியைச் சுற்றி புல் செதுக்கி சுத்தப்படுத்த அனுப்பினார்கள். அந்த வேலைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பு பார்வதிக்கு விடப்பட்டிருந்தது. பார்வதி புறப்பட அவளுக்குப் பின்னாலேயே பொறுப்பதிகாரி மேஜர் வந்தான். அவனுடன் ‘பீ’ புளொக் லீடரும் எப்போதும் அவளுடனேயே சுற்றித்திரியும் இரண்டு பெண்களும் வந்தனர். பார்வதி பின்வாங்கி அவர்களுடன் நடந்தாள். வேலைகளைப் பார்வையிட்ட பின் திரும்பி வரும்போது பொறுப்பதிகாரி, “ஏ’ புளொக் சரியில்ல. அங்க இருக்கிற லீடருக்கு திறமை போதாது.” என்றிழுத்தவர். “அம்மாவ அங்க போடுவம்” என்று முடித்தார்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI





# விவசாயிகள் வீறுநடை பணிந்தது மோடி அரசு

**அ.முத்துக்கிருஷ்ணன்**

புதுதில்லியில் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராடி வரும் விவசாயிகளின் போராட்டங்கள் ஓர் ஆண்டை நிறைவு செய்தது.

விவசாய விளைபொருள்களுக்கான விற்பனை, பதுக்கல், விவசாய சந்தைப்படுத்தல் மற்றும் ஒப்பந்த விவசாய சீர்திருத்தங்களை கையாளுதல் தொடர்பாக மூன்று அவசர சட்டங்களை 2020 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு வேகவேகமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. இந்த சட்டங்கள் முறையான விவாதங்கள் ஏதுமின்றி அவசர சட்டங்களாக, இந்த நாட்டில் உள்ள விவசாயிகள் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை எவரின் கருத்துக்களையும் அறியா-மல், விவாதிக்காமல் ஜனநாயக விரோதமான முறையில் நிறைவேற்றப்பட்டன.

இந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்தியா முழுவதும் பல விவசாய சங்கங்கள் இந்த புதிய சட்டத்திற்கு எதிராக போராட்டங்களைத் தொடங்கினர். முதலில் வேலை நிறுத்தம், ஆர்பாட்டம், போராட்டம் என்றும் பின்னர் பாரத் பந்த் ஒன்றிற்கும் அறைகூவல் விடுத்தார்கள். பஞ்சாப் மாநிலத்திற்குள் ஒரு மாதம் ரயில் நுழைய முடியாதபடி ரயில் மறியல்கள் நடைபெற்றது. டெல்லி நோக்கி வாருங்கள் என்று விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு விடுத்த அறைகூவலை ஒட்டி இந்தியா முழுவதில் இருந்தும் விவசாயிகள் புது தில்லி நோக்கி செல்ல தொடங்கினார்கள்.

96,000 ட்ராக்ட்டர்கள், 22,000 லாரிகள், 6 மாதத்திற்கான உணவு பொருட்கள் உள்ளிட்டவைகளுடன் தலைநகர் புது டில்லியில் 1 கோடியே 40 லட்சம் விவசாயிகள் போராட்ட களத்தில் அணிதிரண்டார்கள். சிங்கூ, திக்ரி மற்றும் காசியாப்பூரில் வேளாண் சட்டங்களுக்கு எதிரான போராட்டம் மையம் கொண்டது. உலக அளவில் எந்த போராட்டதிலும் இத்தனை பெரிய கூட்டம் மனித குலவரலாற்றின் அணிதரப்பட்டதில்லை என சர்வதேச ஊடகங்கள் விவரித்தன.

வட இந்தியாவின் வெவ்வேறு கிராமங்களிலிருந்து இருந்து மக்கள் தன்னிச்சையாக போராடும் விவசாயிகளுக்கு தேவையான பொருட்களை அனுப்ப தொடங்கினார்கள். இப்படி கிராமங்கள் முதல் தேசங்கடந்து வாழும் இந்தியர்கள் வரை இந்த போராட்டத்திற்கு ஆதரவளித்தார்கள். இந்திய விவசாயிகளுக்கு ஆதரவாக இந்தியாவின் எல்லா நகரங்களில் தொடங்கி சர்வதேச தலைநகரங்கள் வரை போராட்டங்கள் நடைபெற்றன. பால், கோதுமை, அரிசி, எண்ணெய் உள்ளிட்ட பொருட்கள் போராட்ட களம் நோக்கி இன்றுவரை வந்தவண்ணம் உள்ளது. லங்கர்கள் எனும் சமூக சமையற் கூடங்கள் முதல் சமூக மருத்துவமனைகள் என திசையெங்கும் தன்னிச்சையாக மக்கள் ஒருவருக்கு ஒருவர் உதவிக் கொள்வது என இந்த போராட்டம் நமக்கு பல புதிய உத்திகளை கற்றுக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. தனியார் பெட்ரோல் பங்க் உரிமையாளர் ஒருவர் விவசாயிகளுக்கு இலவசமாக எரிபொருளை வழங்கி வருகிறார். குவிண்டால் கணக்கில் சமையலுக்குத் தேவையான காய்கறிகளை தினசரி கிராம மக்கள் அனுப்பி வருகிறார்கள்.

ஒன்றிய அரசு பல சுற்று பேச்சு வார்த்தைகளின் போது பிரநிதிகளை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. அரசுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதும் அவை எல்லாம் தோல்வியை தழுவின. ஏழாவது சுற்று பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில் உச்சநீதிமன்றம் ஒன்றிய அரசு இந்த போராட்டத்தை கையாளும் விதம் குறித்து கடுமையான வார்த்தைகளில் சாடியது.

இந்தியாவின் தலைமை நீதிபதி விசாரணையின்போது, அரசாங்கம் இந்தச் சட்டங்களை நிறுத்தி வைக்கட்டும், அல்லது நாங்கள் நிறுத்திவைக்க நேரிடும். இதில் உங்களுக்கு உள்ள கௌரவப் பிரச்சினை என்ன?, நீங்கள் தீர்வின் ஒரு பகுதியா அல்லது பிரச்சினையின் ஒரு பகுதியா என்பது எங்களுக்குத் தெரியாது. ஒருநாள் இந்தப் போராட்டத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படக்கூடும் என்ற அச்சம் எங்களுக்கு உள்ளது. ஏதாவது தவறு நடந்தால் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பேற்க வேண்டும் என்றார். இதனை அடுத்து ஒன்றரை ஆண்டுகளுக்கு இந்த சட்டத்தை நிறுத்தி வைக்கும் முடிவை ஒன்றிய அரசு அறிவித்தது.

தனியார் துறையினரும் ஒப்பந்த அடிப்படையில் வேளாண் உற்பத்தி, கொள்முதல், சேமிப்பு மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட இந்தச் சட்டங்கள் வழிவகை செய்கின்றன. இந்தச் சட்டங்கள் தனியாருக்கு பயன் தருவதாகத்தான் இருக்குமே தவிர, குறைந்தபட்ச ஆதார விலை என்கிற நடைமுறை கைவிடப்படுவதால் விவசாயிகள் கடும் சிரமத்துக்கு ஆளாவார்கள் என்பதை இந்த சட்ட நகலை வாசிக்கும் எவறாலும் உணர முடியும்.

விவசாயிகளுக்கு ஆதரவாக ஒன்றிய அரசு கொடுத்த விருதுகளைப் பலர் திருப்பி அளித்தவர்கள். பஞ்சாப் முன்னாள் முதல்வர் பிரகாஷ் சிங் பதால் அவர்கள் பத்ம விபூசன் விருதையும், சுற்றுச்சூழலியலாளர் பாபா சேவா சிங் அவர்கள் பத்மஸ்ரீ விருதையும், சிரோமணி அகாலி தளம் கட்சித் தலைவர் சுக்தேவ் சிங் திண்ட்சா பத்ம பூசன் விருதையும் திருப்பியளித்தனர். பஞ்சாபை சேர்ந்த எழுத்தாளர்கள் ஜஸ்விந்தர் சிங் மற்றும் ஸ்வரஜ்பீர் தங்களுக்கு வழங்கப்பட்ட சாகித்ய அகாதமி விருதினை திருப்பியளித்தனர்.

பஞ்சாப், ஹரியானாவைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் 35 பேர் ஒன்றிய அரசு வழங்கிய கேல் ரத்னா உள்ளிட்ட விருதுகளைத் திருப்பியளிக்கக் குடியரசுத் தலைவர் மாளிகைக்குச் சென்றபோது தடுத்து நிறுத்தப்பப்பட்டனர்.

தங்கள் விளை பொருளுக்கு ஒரு நிலையான விலையைத்தான் விவசாயிகள் கோருகிறார்கள். சுவாமி நாதன் கமிட்டி பரிந்துரைகளின்படி குறைந்தபட்ச விலை நிர்ணயத்திற்கென ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் நாட்டின் உள்ள அனைத்து விவசாயிகளும் அதனை வரவேற்பார்கள் ஏற்பார்கள். இந்த அபாயகரமான சட்டம் அமலுக்கு வந்தால் இந்திய விவசாயிகள் தங்கள் நிலத்தை பறிகொடுத்து கொத்தடிமைகளாக மாற்றப்படுவார்கள், ஆபிரிக்காவின் பல தேசங்கள் நமக்கு இதனை பாடமாக புகட்டுகிறது.

இந்த சட்டங்கள் இந்திய விவசாயத்தை பெரு முதலாளி கள் வசம் ஒப்படைக்க வழிவகை செய்கிறது என்பதால் இந்த சட்டத்தில் திருத்தங்கள் அல்ல மாறாக இந்த சட்டம் முழுமையாக திரும்ப பெறுவது என்கிற ஒற்றை கோரிக்கை தவிர, வேறு எதற்கும் தாம் சமரசம் செய்து கொள்ளப் போவதில்லை என்பதில் போராட்டக் குழு தீர்க்கமான இருக்கிறது.

விவசாயிகள் படும் வலியை தாங்கமுடியவில்லை என கடிதம் எழுதிவைத்துவிட்டு தற்கொலை செய்துகொண்ட 62 வயது சீக்கிய மதகுரு ஒருவர். ஒரு வருடம் ஆகியும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் இந்த சட்டம் திரும்பப் பெறப்படும் வரை தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள்.

மழைக்கால கூட்டத் தொடர் முழுவதிலுமே 200 விவசாயிகள் தினமும் போராட்ட களத்தில் இருந்து ஜந்தர் மந்தர் பகுதிக்கு சென்று விவசாயிகள் பாராளுமன்றம் என்கிற ஒரு தொடர் போராட்ட வடிவத்தை நடைமுறைப்படுத்தினர்.

டெல்லியில் போராடும் விவசாயிகளை காலிஸ்தானி, தேச விரோதி என்று பல பெயர்கள் சொல்லி அழைத்தார்கள். உத்தர பிரதேச மாநிலம் லக்மிபூர் கேரி மாவட்டத்தின் டிகுனியா கிராமத்தில் போராடும் விவசாயிகள் மீது பாஜக அமைச்சரின் மகன் கார் ஏற்றி போராட்டக்காரர்களை கொலை செய்த சம்பவத்தின் காணொளி உலகம் முழு வதையும் உலுக்கியது. போராடும் ஜெ.என்.யு மாணவர்கள் மீது குண்டர்கள் ஏவி விடுதல், புது தில்லியில் பாஜகவுக்கு வாக்களிக்காத பொது மக்களை ரவுடிகளை ஏவி தாக்குதல், போராடும் ஜாமியா மாணவர்கள் நோக்கி துப்பாக்கியுடன் ஒருவரை அனுப்புவது என தொடர்ந்து போராடுகிறவர்களை பாஜக கட்சியும் அதன் சித்தாந்தத்தை அடியோற்றிய இயக்கங்களும் எவ்வாறு கையாள்கிறார்கள் என்பதை இந்த சம்பவங்களின் கோர்வையை வைத்து நாம் அறிந்துகொள்ளலாம். இந்த பின்னனியில் தான் தமிழக பா.ஜ.கவில் சமூக விரோதிகள் தொடர்ந்து இணைகிறார்கள். தமிழகத்தில் தொடர்ந்து தேடப்பட்டு வரும் குற்றவாளிகளை தமிழக காவல் துறை பாஜகவின் புதிய உறுப்பினர் சேர்ப்பு முகாம்களில் கைது செய்கிற செய்திகள் நினைவிற்கு வந்தால் தவறில்லை.

மேற்கு வங்க தேர்தலில் விவசாயிகள் சங்கங்கள் பாஜவுக்கு எதிராக பிரச்சாரத்தில் களமிறங்கினார்கள், இந்த முறை உத்தர பிரதேச சட்டமன்ற தேர்தலிலும் மாநிலம் முழுவதும் சென்று பிரச்சாரம் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

கடும் குளிர், உடல்நலக் கோளாறு, சாலை விபத்து, கோவிட் தொற்றின் இரண்டாம் அலை, காவல்துறையினருடனான மோதல், தற்கொலைகள், உள்ளிட்டவையால் போராட்டக் களத்தில் உயிரிழந்த விவசாயிகளின் எண்ணிக்கை 600 ஐ தாண்டுகிறது, ஆனால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே இருக்கும் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

வெள்ளையர்கள் ஆண்ட போது கூட இப்படியான அபாயகரமான சட்டங்களை அவர்கள் கொண்டு வரவில்லை, இந்திய விவசாயிகளை இந்திய மண்ணில் இருந்து அப்புறப்படுத்தும் நோக்கம் பிரிட்டிஷாருக்கு இல்லை. இன்றைக்கு இந்தியாவின் விவசாயிகளுக்கு தூக்கு கயிறுகளை வழங்கி அவர்களை அப்புறப்படுத்திவிட்டு பெரு முதலாளிகள் கையில் விவசாயத்தை கொடுக்க ஒன்றிய அரசு முற்படுவதால் தான் தங்கள் இன்னுயிரையும் துச்சமாக மதித்து விவசாயிகள் தொடர்ந்து ஓராண்டாக போராடி வருகிறார்கள்.

கடும் குளிர், மழை, பனி மூட்டம், கண்ணீர் புகை, லத்தியடிகள், மரணங்கள், கோவிட் தொற்றின் இரண்டாம் அலை என அனைத்தையும் தாண்டி மக்கள் இன்னும் பெரும் எண்ணிக்கையில் தங்களின் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். ஆனால் நடிகர்கள், கிரிகெட் வீரர்களுடன் விருந்துகளில் பங்கேற்று அவர்களுடன் புகைப்படங்கள் எடுப்பதில் பாரத பிரதமருக்கு இருக்கும் விருப்பம் இந்த போராடும் விவசாயிகளை சந்திப்பதில் அறவேயில்லை. தமிழக விவசாயிகள் டெல்லியில் மாதக் கணக்கில் போராடிய போதும் பிரதமர் மோடி அவர்களை சந்திக்க மறுத்தது உங்களுக்கு நினைவிருக்கும்.

டெல்லியில் விவசாயிகள் போராட்டம் தொடங்கி வரும் 26-ம் தேதியோடு ஓராண்டு நிறைவடைகிறது. 26-ம் தேதிக்குள் வேளாண் சட்டங்களை மத்திய அரசு ரத்து செய்யாவிட்டால் மீண்டும் டிராக்டரில் டெல்லி நோக்கி முன்பை விட இன்னும் பெரும் திரளாக விவசாயிகள் படையெடுப்போம் என்று அறிவித்த நிலையில் மோடி அரசு வேளான் சட்டங்கள் ரத்து செய்யப்படும் என்று அறிவித்துள்ளது.

இந்தியாவில் இருக்கும் அரசியல் இயக்கங்கள், சமூக இயக்கங்கள் என அநீதிக்கு எதிராக போராடும் யாவருக்கும் இந்த செய்தி பெரும் நம்பிக்கையை விதைத்துள்ளது. அரசு சொன்னது போலவே இந்த மழைக்கால கூட்டதொடரில் இந்த சட்டங்களை திரும்ப பெற்றது, ஆனால் எந்த ஒரு விவாதத்தையும் நடத்த அனுமதிக்காமல் பிடிவாதமான வழிமுறையில் விளக்கியது. ஒரு சட்டத்தை நிறைவேற்றும் போதும், விளக்கும் போதும் ஜனநாயக தேசத்தில் விவாதம் என்பது அவசியம், விவாதம் என்பது உயிர், ஒரு ஜனநாயகம் உயிர்ப்புடன் இருக்கிறது என்று அறிந்து கொள்வதற்கான வழிமுறை.

தங்களின் நான்கு கோரிக்கைகளில் இது ஒன்று மட்டுமே மற்ற மூன்று கோரிக்கைகள் அப்படியே உள்ளன, அவை குறித்து அரசு பேச்சு நடத்த வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கை. ஐந்து மாநில அரசுகளுக்கு தேர்தல் வரும் நிலையில் தேர்தலை மனதில் வைத்து மட்டுமே ஆட்சியாளர்கள் பதுங்குகிறார்கள் என்பதை இந்தியர்கள் அனைவரும் அறிவார்கள்.


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
Security Alarm
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco CARGO

# Covid க்கு முடியாது கிறிஸ்மஸ்ஸையோ Transco வையோ நிறுத்துவதற்கு....




## Christmas Shipping Schecdule

| CUT OFF | EST ARIVAL IN SL | CUT OFF | EST ARIVAL IN SL |
|---|---|---|---|
| September 04 | Oct 12 | September 18 | Oct 26 |
| September 11 | Oct 19 * | September 25 | Nov 02 |
| October 02 | Nov 09 | October 23 | Nov 30 * |
| October 09 | Nov 16 * | October 30 | Dec 07 * |
| October 19 | Nov 23 | | |
| November 01 | Dec 14 | November 05 | Dec 28 |
| November 08 | Dec 21 * | November 27 | Jan 04 * |
| December 04 | Jan 11 | December 18 | Jan 25 |
| December 11 | Jan 18 * | | |
| 2022 | | | |
| January 08 | Feb 15 * | January 22 | Mar 01 * |
| January 15 | Feb 22 | | |

* Only at Campbellfield & Dandenong South Transco Offices

WE ARE DOING BUSINESS AS USUAL



Shop online in Australia have it delivered to Sri Lanka

Transco Shopping

transcoshopping.lk

45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU